# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட் சகோதரிகள்**

ஜோஸ்பிட்டா மேரி OSM, ரெஜினா மேரி FIHM, விர்ஜின் OSM– திருச்சி; ஸ்டெல்லா ரோஸ் CIC, மிரியம் CIC, மேரி செசாரியா, லூர்து மேரி CIC – சென்னை; சின்னராணி SJC - அணிலாடி; டொனட்டெல்லா, அல்போன்ஸ் FIHM, அருள்மேரி FIHM, அனன்சியா மேரி FIHM, ஆக்னஸ் FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்; லில்லி இஸபெல்லா மேரி OSM – மதுரை; சகாயம் SJC, சிரில் SJC - கடலூர்; அருள் சீலி SSAM – நாகர்கோவில்; , சிரோன் OSM, ரூபெல்லா மேரி OSM – நெல்லை; ஜெசிந்தா ஆரோக்கிய மேரி OSM, வித்யா மேரி OSM, லோரா மேரி OSM – புன்னைக்காயல்; சலேத்மேரி FSAG – தாராபுரம்; மோட்ச புஷ்ப ராணி FSAG, செலின், எமெரன்ஸ் மேரி, ஆக்னஸ் ரோசல் மேரி, ரூபி மேரி OSM – தோகைமலை, மார்சலோஸா மேரி - பழையகாயல், ஆனல்லா - செங்கல்பட்டு, ஜெய சேகரி, ஜெயா FSJ,

**அருட்சகோதரர்** - ஹெல்டன் FSC

**பொதுநிலையினர்**

ஆன்டனிக்கா ஸெர்லி, பிரான்சிஸ் பேசில், சந்தனம், செலின் மேரி, லீமா தெரஸ், ஞான சேகரன், அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா – திருச்சி; மார்கரேட் பெல்சியா, அமல செல்வி, அல்போன்சா ஜோதி மேரி, மரிய பிரகாசம் ; வியாகுலம், பிரேமா மோரிஸ், ராணி - சென்னை; புஷ்பக்கண்ணு, மிக்கேல்சாமி – கோவை; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர். அம்மி பிராஜ், ரூபியா - மங்கலக்குன்று.



## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**அருட்சகோதரி. சிரோன் திருநெல்வேலி**

**புஷ்பக்கண்ணு கோயம்பத்தூர்**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# பக்தி

## பதிப்பாசிரியர் பக்கம்

**ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**


மனிதர்களையும் இறைவனையும் இணைக்கக்கூடிய இணைப்புப் பாலம்தான் இறை பக்தி. இறை பக்தியினை மனிதர்கள் பல்வேறு முறைகளில் வெளிப்படுத்துகின்றார்கள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியினை அன்னை மரியாள் மூலம் வெளிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் செபமாலை பக்தி.

அக்டோபர் மாதம் 7 ஆம் தேதி நாம் செபமாலை அன்னையின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். இந்த ஜெபமாலை என்பது திருவழிபாடுகளில் ஒன்றா என்றால் இல்லை. இது பக்தி முயற்சிகளில் ஒன்று. இந்த செபமாலை பக்தி என்பது ஒரே நாளில் உருவான ஒன்று கிடையாது. பல படிநிலைகளைக் கடந்துதான் இந்த செபமாலை பக்தி உருவானது.

தொடக்ககால திருச்சபையில் விசுவாசிகள் பலவாறு துன்புறுத்தப்பட்டார்கள். ஆண்டவர் இயேசு மீது விசுவாசம் கொண்ட ஒரே காரணத்திற்காக நம்பிக்கையாளர்கள் கொல்லப்பட்டார்கள். இவர்களுக்கு அஞ்சலி செலுத்த செல்பவர்கள் ஒவ்வொரு மலராக எடுத்து செபித்து அவர்கள் இறந்த இடத்தில் வைத்தார்கள். அதேபோல எகிப்தில் வாழ்ந்த துறவிகள் தாங்கள் எத்தனை முறை செபிக்கிறோம்



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| ஜெபமாலை செபிப்போம் | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| குடும்ப வாழ்வில் மரியா | - 28 |
| புகழ்மாலை சூடும் செபமாலை | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

என்பதை அறிந்துக் கொள்ள கூழாங்கற்களைக் கொண்டோ தானியங்களைக் கொண்டோ தங்கள் செபங்களை எண்ணுவது வழக்கம்.

மேலும் தொடக்ககாலத் திருச்சபையில் நூற்றைம்பது திருப்பாடல்களையும் பாடி செபிப்பது வழக்கம். ஆனால் பலருக்கு திருப்பாடல்களை படிக்கத் தெரியாது. அதனால் அதற்கு மாறாக அவர்கள் நூற்றைம்பது முறை '**அருள் நிறைந்த மரியே வாழ்க**' என்ற செபத்தை சொல்வது வழக்கம். பதினைந்தாம் நூற்றாண்டில்தான் மறையுண்மைகளோடு செபமாலை செபிக்கின்ற வழக்கம் உருவானது.

செபமாலையில் அன்னை மரியாள் மற்றும் இயேசுவின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை இணைத்தது கார்த்தூசியன் துறவி **பிரஸ்சியாவின் தோம்னிக்**. பொதுமக்களிடையே இந்த பக்தி முயற்சியை பரப்பியவர் சுவாமிநாதர் சபையைச் சார்ந்த **ஆலன் ரோச்**. அன்னை மரியாள் இந்த பக்தி முயற்சியினை ஆதரிக்கின்றாரா என்றால், நிச்சயாக ஆதரிக்கின்றார். அதனால்தான் அன்னை மரியாள் தன்னுடைய ஒரு காட்சியில் செபமாலையோடு காட்சி கொடுத்தார்.

கத்தோலிக்கர்கள் உட்பட கிறிஸ்தவர்களிடம் செபமாலையைப் பற்றி ஒரு தவறான கருத்து நிலவுகின்றது. அது என்னவென்றால் செபமாலை மூலமாக அன்னை மரியாளைப் புகழ்ந்து பாடுகின்றோம் என்பது. ஆனால் உண்மையான கருத்தென்பது மனித மீட்பையும் கிறிஸ்துவின் வாழ்வையும் உள்ளடக்கிய இறைவார்த்தையின் மறுபதிவுதான் இந்த செபமாலை.

பக்தி முயற்சிகளில் ஒன்றான இந்த செபமாலை கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். சாதாரண படிப்பறிவில்லாத மக்களுக்காக உருவாக்கப்பட்ட செபமாலையானது உலகம் முழுமையும் படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று எல்லாத் தரப்பு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு செபிக்கப்படுகின்றது. செபமாலை அணிவது என்பது அழகுக்காக அல்ல ஆன்மீகத்திற்காக என்ற விழிப்புணர்வு கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடம் உருவாக வேண்டும்.

குடும்ப செபமாலை செய்வது வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கு செபமாலையின் முக்கியத்துவத்தையும் செபமாலையில் பயன்படுத்தப்படும் செபங்களான **விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே** மற்றும் **அருள் நிறைந்த மரியே** செபங்களை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்வதற்கு துணைபுரியும். செபமாலையில் மணிகள் நூல் மூலமாக ஒன்றாக கோர்க்கப்பட்டிருப்பது போல குடும்பங்களில் உறவுகள் அன்பு என்ற நூல் மூலமாக ஒன்றாக இணைக்கப்படட்டும்.

**செபமாலை நாம் என்றும் அணியும் அருள் மாலை ஆகட்டும்.**
**செபமாலை நாம் என்றும் துதிக்கும் புகழ் மாலை ஆகட்டும்.**





தந்த ஜீவமாதாவிடம் என் பேரனையும் அழைத்து வந்தேன். இரட்டிப்பான நன்மையை உனக்கு ஏற்ற நேரத்தில் வழங்குவேன் என்று இன்னுமொரு குழந்தையும் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஆஷா ராஜசேகர் – ஊட்டி**

எனக்கு திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. நாங்கள் ஊட்டியிலிருந்து சென்னை வந்துவிட்டோம். என் கணவர் சென்னையில் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். குழந்தையில்லை என்று மருத்துவரை அணுகினோம், அவர்கள் குழந்தை பாக்கியமே இல்லை என்றும் டெஸ்ட் டியூபில் குழந்தைக்கு முயற்சி செய்தாலும் பலனளிக்காது என்று கூறினார். மேலும் என் அக்காவிற்கும் குழந்தையில்லை. குடும்பத்தில் குழந்தை பாக்கியம் கிடையாது என்று ஊரில் உள்ளவர்கள் கூறினார்கள். அச்சமயம் என் கணவருடன் வேலைப் பார்த்த நண்பர் ஒருவர் ஜீவமாதவைப் பற்றிக் கூறினார். அவ்வாலயம் சோழிங்கநல்லூரில் இருக்கிறது. நீங்கள் போய் செபம் செய்யுங்கள் என்று கூறினார். அப்பொழுதே என் மனதில் நான் டாக்டரிடம் ஆலோசனைப் பெற்று குழந்தை பெற்றுக் கொள்ள என் மனம் இடம் தரவில்லை. மாதாவிடம் ஜெபித்தேன். எனக்கு குழந்தை வரம் தாருங்கள் என்று வேண்டினேன். 2020 ஆம் ஆண்டு எனக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. ஜே. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

செப்டம்பர் மாதம் 3 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வழக்கம்போல இல்லாமல் பக்தர்கள் கூட்டம் சற்றுக் குறைவாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**சித்ரா – தாழம்பூர்**

என் மகளுக்கு திருமணமாகி நான்கு வருடங்கள் கடந்தும் குழந்தை பாக்கியம் இல்லை. இரண்டு தடவை கருவுற்றும் கரு கலைந்துபோனது. மருத்துவரிடம் சென்றோம் எந்த பலனுமில்லை. சத்துமிக்க உணவுகள் கொடுத்தும் பலனில்லை. என் வீட்டுக்கருகில் இருக்கும் சகோதரி ஜீவமாதாவைப் பற்றிக் கூறினார்கள். அவர்கள்தான் எங்களை அழைத்து வந்தார்கள். நாங்கள் ஜீவமாதாவிடம் உருக்கமாக மன்றாடினோம். அம்மா என் வேண்டுதலைக் கேட்டு என் மகளுக்கு குழந்தை பாக்கியம் கொடுத்தார்கள். குழந்தை நின்று இரண்டு மாதங்கள் ஆனதும் எனக்கு பயம் வந்தது ஏனென்றால் ஏற்கனவே இரண்டு முறை கருச்சிதைவு ஏற்பட்டிருகிகன்றது. அதனால் 45 நாட்கள் ஆனதும் மருத்துவரிடம் சென்றோம், அவர்கள் மூன்று மாதக் கரு உள்ளே இருக்கின்றது என்றார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**செல்வராஜ் – சேலையூர்**

நான் செயின்ட் ஜோசப் ஆலயப் பங்கைச் சார்ந்தவன். 2013 ஆம் ஆண்டு என் மகளுக்கு திருமணம் ஆனது. இரண்டு ஆண்டுகள் கடந்தும் என் மகளுக்கு குழந்தையில்லை. என் மனைவி பணிபுரியும் பள்ளியில் உள்ள சக ஆசிரியர் உங்கள் மகளுக்கு குழந்தையில்லையா என்று விசாரித்தார்கள். அதன்பிறகு மருத்துவரிடம் சென்று மருத்துவம் பார்த்தும் எந்த பயனும் இல்லை. அதே ஆசிரியர்தான் ஜீவமாதா ஆலயம் பற்றி கூறினார்கள்.அதன்பிறகு நானும் என் மனைவியும் ஜீவமாதாவின் ஆலயத்திற்கு வந்து மண்டியிட்டு ஜெபித்தோம். இங்கிருக்கும் நோட்டில் எழுதிவைத்துவிட்டு வந்தோம். 2015 ஆம் ஆண்டு என் மகள் கருவுற்றாள், ஒரு அழகான ஆண் குழந்தையையும் பெற்றாள். என் மகளுக்கு குழந்தை பாக்கியம்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு வயதான அரசன் தன்னுடைய நாட்டிற்கு ஒரு புதிய அரசரை தேர்ந்தெடுக்க நினைத்தார். அரசருக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். ஒருநாள் அரசர், நால்வரையும் அழைத்து, நால்வரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கப்போவதாகவும் அதற்காக ஒரு தேர்வு வைக்கப் போவதாகவும் அறிவித்தார். அரசர், என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது, இது கணித முறைப்படி வடிவமைக்கப்பட்டது. அதனைத் திறக்க நால்வருக்கும் ஒரேயொரு வாய்ப்புதான் வழங்கப்படும். அதனை யார் விரைவில் திறக்கிறாரோ அவரே நாட்டின் அடுத்த அரசர் என்று கூறினார். அரசனாக வேண்டும் என்ற ஆசையில் மூன்று மகன்களும் இரவு முழுவதும் பல ஓலைச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்தனர், பல கணித மேதைகளின் புத்தகங்களைப் படித்தனர். ஆனால் அரசனின் மகள் மட்டும் கையில் ஒரு மாலையை வைத்துக்கொண்டு செபித்துக் கொண்டு இருந்தார். மறுநாள் அரசவை கூடியதும் சேவகர்கள் கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட பூட்டைத் தூக்கிவந்து அரசவையில் வைத்தனர். பூட்டு விசித்திரமாக இருந்தது, ஆகவே மூன்று மகன்களும் ஓலைச் சுவடிகளையும், புத்தகங்களையும் திரும்பத் திரும்ப புரட்டிப் பார்த்தனர். ஆனால் அந்தப் பூட்டைத் திறப்பதற்கான வழி தெரியவில்லை, ஆகவே தோல்வியை ஒப்புக்கொண்டனர். அரசரின் மகள் வந்தாள், பூட்டை சுற்றிப் பார்த்தாள், மிகவும் எளிதாக திறந்துவிட்டாள். காரணம் பூட்டு பூட்டப்படவில்லை. அரசன் மிகுந்த ஆச்சரியத்தோடு “இது எப்படி முடிந்தது?” என்று கேட்டார். அதற்கு அவள், “என் சகோதரர்கள் மூவரும் உலக அறிவைத் தேடி தோற்றுப் போயினர், நான் ஞானத்தின் இருப்பிடமான அன்னையின் பரிந்துரையை நாடினேன். வெற்றிக் கொண்டேன், செபமாலைதான் என் வெற்றியின் சின்னம்” என்று கூறி கையில் இருந்த செபமாலையைக் காட்டினார்.

புனித பாத்ரே பியோ இக்காலத்தில் தீமையை எதிர்த்து நிற்க சரியான கருவி செபமாலை மட்டுமே என்று கூறுகிறார். அக்டோபர் மாதம் புனித செபமாலை அன்னைக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட மாதம். கத்தோலிக்க திருஅவையின் மிகப் பெரிய அடையாளம் ஜெபமாலை. இயேசுவை மையமாகக் கொண்ட ஒரு தியான முறைதான் ஜெபமாலை. இயேசு மற்றும் மரியாவின் வாழ்வில் நடைபெற்ற மீட்பின் இரகசியங்களை தியானிக்கும் ஒரு புகழ்மாலைதான் செபமாலை. கடவுளின் மீட்புத் திட்டத்தின் ஒரு சுருக்கம்தான் செபமாலை. நாம் செபமாலை செபிக்கும்போது நமக்குத் தேவையான அருளை அன்னை மரியா பெற்றுத் தருகிறார். தீமைகளை வெற்றிக் கொண்டு மீட்பின் பாதையில் நம்மை அழைத்துச் செல்கிறாள். மகிமையும் வல்லமையும் நிறைந்த இந்த ஜெபமாலையை நாம் தினமும் செபிப்போம்.

# ஜெபமாலை செபிப்போம்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

அக்டோபர் மாதம் மலர்ந்ததும், நமது மனதில் எழுவது ஜெபமாலை. ஆம் ஜெபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். இம்மாதம் ஏழாம் நாள் புனித ஜெபமாலை அன்னைக்கு திருவிழா எடுத்து மகிழ்கிறோம். அன்னை கன்னிமரியா ஒவ்வொரு காட்சியின்போதும் விடுத்த வேண்டுகோள்: ஜெபமாலை செபியுங்கள். எனவே இதனுடைய மேன்மையும் மகத்துவமும் மிக உயர்ந்தது என நமக்குத் தெரிகிறது. எளிய ஜெபம். ஆனால் அதனை செபிக்கும் விதம் நம்மை 2000 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்வுகளுக்கு எடுத்துச் செல்கிறது. மூவொரு இறைவனை நினைவுபடுத்துகிறது. இறைமகன் இயேசு கற்றுக்கொடுத்த இறை வேண்டல் செபத்தை ஞாபகப்படுத்துகிறது. மரியா வானதூதரிடமும் எலிசபெத்திடமும் பெற்ற வாழ்த்தை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறது. இயேசுவின் வாழ்வு முழுவதும் தியானிக்கப்படுகிறது. நாம் செபமாக காட்சித் தியானமாக இதை மேற்கொள்ளும்போது உண்மையில் ஆழ்ந்த இறயனுபவத்திற்கு இந்த சிறிய செபமாலை வழிநடத்துகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஜெபமாலையின் இரகசியத்தை இக்கட்டுரை வழி காண்போம்.

**திரு அவையில் ஜெபமாலை**

திரு அவை அதன் தொடக்க காலத்திலிருந்து பலவகையான தீமைகளோடு போராடி வெற்றியடைந்துள்ளது. இத்தருணங்களில் ஜெபமாலை சிறந்த ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. ஆல்பிஜென்சியர் தீப்பாறையான கொள்கைகளை பரப்பியபோது ஜெபமாலை வழியாகவே புனித சுவாமிநாதர் அதை முறியடித்தார். கிறிஸ்தவர்களோடும் முஸ்லீம்களோடும் போர் மூண்டபோது கிறிஸ்தவப் போர் வீரர்கள் ஜெபமாலை செபத்தின் மூலம் லெபென்டோ என்ற இடத்தில் அக்டோபர் ஏழாம் நாள் 1572 ஆம் ஆண்டு வெற்றி பெற்றனர். கிறிஸ்தவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் 1863 ஆம் ஆண்டு போர் மூண்டது. கிறிஸ்தவர்கள் தோல்வி அடையும் நிலையில் இருந்தார்கள். ஆனால் மக்கள் நம்பிக்கையுடன் ஜெபமாலை செபித்ததால் வெற்றியடைந்தார்கள். திருத்தந்தை பதிமூன்றாம் கிரகோரி, ஜெபமாலை அன்னை விழாவை ஆண்டுதோறும் அக்டோபர் 7 ஆம் நாள் சிறப்பிக்கப் பணித்தார். இவ்வாறு ஜெபமாலை ஜெபிக்கும் பழக்கம் திருஅவையில் வளர்ந்தது. தூய ஜெபமாலை அன்னையின் மீதும் பக்தி பரவியது. திருத்தந்தை பிரான்சிஸ் ஜெபமாலையைப் பற்றி பின்வருமாறு எடுத்துரைக்கிறார், "ஜெபமாலையின் அழகைக் கண்டு கொள்ளுங்கள். மீட்பின் மறை உண்மைகளை தியானிக்கும்போது இறைவனின் அன்பு முகத்தையே நாம் பார்க்கிறோம். எல்லாத் தீமைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் காப்பாற்ற ஜெபமாலை செபிப்போம். அனைவரும் நம்முடனே அதைத் தூக்கிச் செல்வோம்.





ஒரு நாட்டையே மாற்ற முடியுமெனில்
தனி ஒரு ஆளை, குடும்பத்தை சமுதாயத்தை
ஏன் மாற்ற முடியாது?



திரும்பத் திரும்ப "அருள் நிறை" ஜெபம் சொன்னாலும்
நினைவெல்லாம் நமது ஆண்டவரின்
பிறப்பு, வளர்ப்பு, பாடுகள், இறப்பு,
உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவி,
அன்னை மரியின் மகத்துவம்
இவைகள்தாம் ஜெபமாலையின் சாரமாகிறது.

"அருள் மிகப் பெற்றவரே வாழ்க!
ஆண்டவர் உம்முடனே" – என்னும்
வானதூதரின் வாழ்த்தொலி
எத்துணை இனிமையானது!
"பெண்களுக்குள் நீர் பேறுபெற்றவள்" – என்னும்
எலிசபெத்தின் வாழ்த்து
எத்துணை சுவையானது!
"உமது திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே" – என
தாயும் சேயும் புகழப்படுதல்
எத்துணை இன்பமானவை!
திரும்பத் திரும்ப "அருள் நிறை மரியே" எனச் சொன்னாலும் - அதில்
மீட்பின் வரலாறும் அன்னையின் அருட்கடலும்
அலைமோதுகின்றனவே!- எனவே

ஜெபமாலை – நமது வாழ்வினை உயர்த்தும் உன்னத மாலை
ஜெபமாலை – வெற்றியைத் தரும் விண்ணக மாலை
ஜெபமாலை - அதிசயங்கள் செய்யும் அருள்நிறை மாலை
ஜெபமாலை – சக்தி மணம் கமழும் சண்பக மாலை
ஜெபமாலை – மனத்திடம் நல்கும் மாணிக்க மாலை
ஜெபமாலை – தடைகளை உடைக்கும் தெய்வீக மாலை
அத்தெய்வீக மாலையைத் தினமும் சூடுவோம்.

# புகழ்மாலை சூடும் செபமாலை

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

1517 –ஆம் ஆண்டு அக்டோபர் 7 –ஆம் நாள்
“லெபான்றோ” என்னும் இடத்தில்
கிறிஸ்தவர்கள் தம் எதிரிகளான துருக்கியரை
ஜெபமாலை ஜெபித்து வெற்றிக் கொடி நாட்டினர்.
அதன் நினைவாகவே அக்டோபர் 7-ம் நாள்
ஜெபமாலை அன்னைக்கு விழா எடுத்து மகிழ்கின்றோம்.
லூர்து அன்னை மசபியேல் குகையில்
பெர்நதத் சிறுமிக்கு அளித்த காட்சியை நினைவோம்
காட்சியில்..
சிறுமி ஜெபமாலை ஜெபிக்க முயன்றபோது
அன்னையின் கையில் பெரியதொரு
ஜெபமாலையைக் கண்டார்
பெர்நதத் ஜெபமாலை ஜெபித்தபோது
அன்னையும் தமது ஜெபமாலையில்
ஒவ்வொரு மணியாக நகர்த்தினார்
எனப் பெர்நதத் சொன்னது – நம்மை
ஜெபமாலை ஜெபிக்கத் தூண்டும் அருட்சாட்சியன்றோ!

பாத்திமாவில் அன்னை தந்த காட்சியில்
“ஜெபமாலை ஜெபியுங்கள்- ரஷ்யாவைத்
தூய மாசற்ற என் இதயத்துக்கு ஒப்புக்கொடுங்கள்” –என்றார்.
ரஷ்யா மனந்திரும்ப உலகமே ஜெபமாலை ஜெபித்தது.
ரஷ்யாவில் கம்யூனிசத் திரை விலகி
சுதந்திரக் காற்று வீசியது
இரும்புத் திரை நாடு மாறியது
கம்யூனிசம் உடைந்தது- இது
ஜெபமாலை ஜெபித்ததன் விளைவன்றோ!
ஜெபமாலை ஜெபித்து





ஜெபமாலை ஜெபிக்கும்போது கத்தோலிக்க உலகம் இணைகின்றது என்றும் ஆணித்தரமாக நாம் குடும்பமாக ஜெபிக்க வேண்டிய அழகான ஜெபம் இது என்றும் கூறுகிறார். தற்போது ரஷ்யா- உக்ரைன் போரில் அமைதி ஏற்பட திருத்தந்தை ஜெபமாலை செபிக்க வலியுறுத்துகின்றார்.

## ஜெபிக்கும் மரியா

அன்னை கன்னி மரியா வானதூதரை சந்திக்கும் முன்பே செப மனநிலையில் இருந்தார். எனவேதான் இறையருளை முழுமையாய் பெற்றிருந்தார். இறையன்பில் மூழ்கித் திளைத்திருந்தார். கபிரியேல் அதிதூதர் வாழ்த்தை தேர்ந்து தெளிதல் மூலம் உணர்ந்து பதிலளித்தார்; பணிந்தார் இறை மகன் இயேசுவை தன் உதிரத்தில் தாங்கியதும் இறைவனை சுமக்கும் புதிய உடன்படிக்கையின் பேழையானார். தன்னைப் போன்று சிலுவையின் அடியில் தன் மகன் தனக்கு அளித்த மக்களும் செபிக்கும் மக்களாக வாழ விரும்புகிறார். அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று இயேசுவைப் போன்ற மனநிலையில் வாழ அழைப்பு விடுத்துக் கொண்டேயிருக்கிறார். லூர்து அன்னை மக்பியேல் குகையில் பெர்னதெத்துக்கு 18 முறை காட்சி அளித்தார். இக்காட்சிகள் பெப்ரவரி 11 ஆம் நாள் முதல் ஜீலை 16 ஆம் நாள் வரை இடம் பெறுகிறது. இத்தருணங்களில் மரியா ஒளிபொருந்திய முத்துக்களாலான ஜெபமாலையை தன் கரத்தில் ஏந்தி அது நகர்வதாக அமைந்திருந்தது உலக அமைதிக்காகவும், பாவிகள் மனமாற்றம் அடையும் ஜெபமாலை செபிக்க வேண்டுமென்று பெர்னதெத் வழியாக உலக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். புனித பாத்திமா அன்னை, முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த வேளையில் மூன்று சிறுவர் சிறுமியருக்கு ஆறு முறை காட்சியளித்தார். இக்காட்சி 1917 ஆம் ஆண்டு மே மாதம் 13 –ஆம் நாள் வரை நிகழ்ந்தார். காட்சியின்போது அன்னை மரியா செபமாலை கரத்தில் ஏந்தியிருந்தார். செபமாலை செபித்து உலக அமைதிக்காக பாவிகள் மனந்திரும்ப ஒப்புக்கொடுக்க கேட்டுக் கொண்டார். அன்னை கூறியபடியே போர் முடிவுக்கு வந்தது. ஜெபமாலை வழியாக திருஅவை பல தடைகளை மேற்கொண்டு இறையாட்சியைப் பரப்பி வருகின்றது. பாத்திமாவில் காட்சி கொடுத்தபோதுதான் “ஒ என் இயேசுவே” என்ற ஜெபத்தை மூன்று குழந்தைகளுக்கும் கற்பித்தார். செபமாலை செபிக்க வேண்டும் என்பது நமது அன்னையின் விருப்பம். அதை நிறைவேற்றுவோம். நமது வாழ்வில் அற்புதங்கள் நிகழ்வதைக் காண்போம்.

## எப்படி ஜெபிப்பது

செபமாலையின் 20 மறை உண்மைகளும் இயேசுவோடும், மரியாவோடும் தொடர்புடையவை அருட்சாதனங்களையும் நினைவூட்டுகின்றன. மூவொரு இறைவனை பிரசன்னப்படுத்துகின்றார். தூய ஆவியானவரின் அருள் வரங்களை சுட்டிக்காட்டுகின்றார். எனவே இம்மறை உண்மைகளை காட்சியாக உருவாக்கலாம். இக்காட்சிகள் சுரூபங்கள் வழியாக அமைந்திருக்கிறது. அவைகளின் மீது நம் கண்ணைப் பதிய வைத்து, எண்ணங்களை ஒருமுகப்படுத்தி செபங்களை நாம் திரும்பத் திரும்ப சொல்லும்போது உண்மையில் மரியின் அருள் வரங்களை உணர்வோம். அருள் நிறைந்த மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே என்று உணர்ந்து சொல்லும்போது, இயேசுவின் மனித அவதார நிகழ்வுகள், இறைவன் நம்மோடு இருக்கின்றார் என்ற இறையியல் சிந்தனைகள் நம்மை ஆட்கொள்கின்றன. எனவே நற்செய்தி பகுதிகளை வாசித்து, முதல் சனிக்கிழமைகளில், அன்னையின் விழா நாட்களில் குடும்பமாக, அன்பியமாக, பங்கு அளவில் செபிக்கும்போது செபமாலையின் மகத்துவத்தை உணரலாம். அருள்நிறை மந்திரத்தில் முதல் பகுதி மரியாவை வானதூதரோடும் எலிசபெத்தோடும்

இணைந்து வாழ்த்துவதாக அமைகின்றது. எல்லாத் தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவள் என்பர் என்ற மரியாவின் வாக்கு இங்கு நிறைவேறுகிறது. இரண்டாவது பகுதி நமது மன்றாட்டாக அமைகிறது. ஓ என் இயேசுவே என்ற சிறிய செபமானது பாவம், மன்னிப்பு, இறைவனின் இரக்கம், விண்ணகம், இறைவனைக் காணாத நிலைமை ஆகிய அனைதது எதார்த்தங்களையும் நாம் அன்றாடம் நினைவில் இருத்தி நமது கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தை மரியாவோடு இணைந்து செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

**ஜெபமாலையின் மகிமை**

ஜெபமாலை நமது அன்னைக்கு நாம் அளிக்கும் அன்பு பரிசு. இதை செபிப்பதால் நமக்குத்தான் நன்மைகள். ஏராளமான புனிதர்கள் ஜெபமாலை பக்தியுடன் அடிக்கடி செபிப்பதால் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். ஜெபமாலை சொல்வதால் நாம் அருள் பெற்றவர்களாக, பாதுகாப்பு நிறைந்தவர்களாக, பாவம், நரகம், தீமை எதுவும் நம்மை அணுகாதபடி காப்பாற்றப்பட்டவர்களாக இருக்கிறோம். நமது ஆன்மா முடிவில்லாத இன்பத்தைப் பெறுகிறது திருவருட்சாதனங்களைப் பெற்று இருக்கிறோம். விண்ணக இன்பத்தில் பங்கு பெறுகிறோம். நாம் கேட்பதெல்லாம் அன்னை பெற்றுத் தருகிறார். இவ்வாறு மரியா, தொமினிக் என்ற புனிதரிடம் கூறியுள்ளதை புனிதரின் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறோம்.

காட்சி தியான வடிவில் ஒவ்வொரு மறை உண்மைகளையும் தியானித்து செபிக்கும்போது உள்ளத்தின் ஆழத்தில் ஆழ்ந்த அமைதியைத் துய்க்கிறோம். அன்னை மரியாவிடம் இந்த அமைதி வெளிப்பட்டது. தன் வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் பொக்கிஷமாக பொதிந்து , தியானித்து வந்தார். நாமும் இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரை மற்றும் உயிர்ப்பு நிகழ்வுகள் அனைத்தையும் ஆழ்ந்து தியானித்து செபமாலை செபிக்கும்போது இறைவனில் மிகவும் நெருக்கமாக வளர்கிறோம். புனிதத்தை நோக்கி இறைவன் நம்மை அழைப்பதை உணர்கிறோம். ஒவ்வொரு பத்துமணியையும் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளுக்காக அர்ப்பணிக்கும்போது துன்புறும் மக்களோடு உணர்வால் இணைகிறோம். நோயாளிகள், இறந்தோர் இல்லங்களில் சென்று செபிக்கும்போது அங்கு துன்பத்தினால் வாடி இருப்போர் நிறைய ஆறுதலைப் பெறுகின்றனர். துன்ப நேரங்களில் அதிகம் செபிக்க முடியாது. ஆனால் அருள் நிறை மரியை திரும்பத் திரும்ப அன்புடன் அழைக்கும்போது நமது சுமைகள் கரைந்து போகும். கருவை சுமந்து இருக்கும் பெண்கள் மற்றும் மழலைகளை தன்மடியில் வைத்திருக்கும்போது பெண்கள் இச் செபங்களை முணுமுணுத்து சொல்வது தாய்க்கும், சேய்க்கும் ஆரோக்கியத்தைக் கொண்டுவரும் என சொல்லப்படுகிறது.

**நிறைவுரை**

ஜெபமாலை ஒரு குடும்ப ஜெபம். இதை தினமும் கூடி செபிப்போரின் குடும்பம் குலையாது; பிரியாது. அங்கு அமைதியும் அன்பும் குடிகொள்ளும். நல்ல உடல் நலமுடன் நீண்ட காலம் குடும்பத்திலுள்ளவர்கள் வாழ்வர். அவர்கள் வாழ்வில் ஒரு அர்த்தம் இருக்கும் இறைவனோடு எப்போதும் தங்களை இணைத்துக் கொள்வர். இங்கு குழந்தைகள் பலவகையான நற்பண்புகளில் சிறந்து விளங்குவார்கள். இயேசுவின் மறை உடலாம் திருச்சபையோடு ஜெபமாலை ஒரு குடும்பத்தை இணைக்கிறது. எதிர்பாராத இழப்புக்களை, தோல்விகளை சந்திக்க, சக்தியைத் தருகிறது ஜெபமாலை. அனைவரோடும் பணிவோடும் மகிழ்வோடும், விசுவாசத்தோடும் வாழ்வதால் அண்டை வீட்டார் கூடி செபிக்கும் குடும்பத்தைத் தேடி வருகின்றனர். மரியாவோடும் புனிதர்களோடும் தோழமை உறவில் திளைக்கின்றனர். மன அழுத்தம், மனச் சோர்வு போன்ற நோய்கள் இவர்களை அடைவதில்லை. எனவே தனியாகவும், குடும்பமாகவும், குழுக்களாகவும் செபிப்போம். நாம் ஜெபமாலையின் ஒரு நுனியைப் பிடிக்க மறு நுனியை மரியா பிடித்த வண்ணம் இருக்கின்றார். நமக்கு அருள், பொருள் வரங்களை நிறைவாகப் பெற்றுத் தர காத்து இருக்கின்றார். அவர் சொல்வதுபோல் செபிப்போம். ஜெபமாலையின் மகத்துவத்தை உணர்வோம்.





குடும்பத்தில் இருக்கின்ற அனைவரிடமும் இருக்கின்றபோது குடும்ப வாழ்வானது சிறப்பாக இருக்கும்.

மரியாள் யாரையும் பார்த்து கடுஞ்சொல் எதையும் பேசவில்லை. கனிவோடு உரையாடி தம் உறவை வளர்த்ததை நாம் காண்கின்றோம்.

மரியா கானாவூர்த் திருமணத்தின்போது திருமண வீட்டாருக்காக தன் மகனிடம் கனிவோடு பரிந்துரைப்பதைப் பார்க்கின்றோம். இயேசு மரியாவிடம், "அம்மா எனது நேரம் இன்னும் வரவில்லையே" (யோவா 2:4) என்று சொன்னபோதும் மரியா தன் மகனை அதட்டவில்லை, கோபப்படவுமில்லை. மாறாக, "அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்" (யோவா 2:5) என்று இயேசுவின் சீடர்களிடம் கனிவோடு கூறுவதைப் பார்க்க முடிகின்றது.

காணாமற்போன இயேசுவைக் கண்டுபிடித்தவுடன் மரியா தம் மகன் மீது கோபப்படவில்லை. மாறாக, அவர் மனம் நோகாதபடி, "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே" (லூக் 2:48) என்று கனிவோடு கூறுவதைக் காண்கின்றோம்.

நம்முடைய குடும்ப வாழ்வில் நாம் மரியாவுக்கு எதிர்மாறாக பல நேரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கடுமையான வார்த்தைகளால் ஒருவர் மற்றவரைத் திட்டித் தீர்த்துவிடுகின்றோம். மற்றவர்களுடைய மனதைக் காயப்படுத்தி விடுகின்றோம். அனல் கக்கும் வார்த்தைகளை அள்ளி வீசிவிடுகின்றோம். கடுஞ்சினம் நிறைந்த வார்த்தைகள்தான் நம் உறவைப் பாதிக்கின்றது, உடைத்துவிடுகின்றது. குடும்ப வாழ்வில் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்வதற்கு கோபத்தில் நாம் பேசுகின்ற வார்த்தை காரணமாக அமைந்துவிடுகின்றது. "நீ பேசிய வார்த்தையை என்னால் மறக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது" என்று கூறி உறவை உடைத்துக் கொள்ளுகின்ற தம்பதியரால் உருக்குலைந்துபோன குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன.

**"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு" (குறள் 129)**

என்று வள்ளுவர் சொல்வதுபோல நாம் உதிர்க்கின்ற கடுஞ்சொல் மற்றவர் மனதில் ஆறாத வடுவாக மாறி நம் குடும்ப அமைதியை சீர்குலைத்துவிடுகின்றது.

"நெல்லைக் கொட்டினால் அள்ளிவிடலாம்; சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது" என்று சொல்வார்கள். நாம் பேசுகின்ற பேச்சு, உதிர்க்கின்ற வார்த்தை ஆகியவற்றை மிகவும் கவனமுடன் கையாள வேண்டும். யார் மனதையும் காயப்படுத்தாத கனிவான வார்த்தைகளைப் பேசி அன்புநிறை செயல்களைச் செய்கின்ற போது உடைந்துபோன உறவுகளை மீண்டும் புதுப்பிக்க முடியும்.

மரியாவிடம் இருந்த கனிவு நம் குடும்பத்திலும் இருக்கட்டும். நம் குடும்ப வாழ்வும் சிறக்கட்டும் இனிமைமிகு இல்லறமாக.



## குடும்ப வாழ்வில் மரியா 8

அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
சோழிங்கநல்லூர், சென்னை

மரியா வாழ்ந்த திருக்குடும்பத்தில் மனத்தாழ்மை என்ற குணம் எப்படி மேலோங்கியிருந்தது என்று கடந்த இதழில் சிந்தித்த நாம் அதே குடும்பத்தில் கனிவு என்ற பண்பு எவ்வாறு இனிமை சேர்த்தது என்று இவ்விதழில் சிந்திப்போம்.

**மரியா குடும்பத்தில் கனிவு**

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"** (குறள் 100)

இனிய சொல் பழத்திற்கு சமமானது. கடுஞ்சொல் காய் போன்றது. கனியிருக்கும்போது காயைச் சுவைக்காதீர்கள் என்று திருவள்ளுவர் கூறுவார்.

ஒரு பழம் முதிர்ச்சியடைந்துவிட்டால் கனிந்துவிட்டது என்று சொல்வோம். அதேபோல் முதிர்ச்சியடைந்த மனித அன்புதான் கனிவு எனப்படுகிறது. சுருங்கச் சொன்னால் அன்பின் முதிர்ச்சியே கனிவு ஆகும். பிறரின் நிலையை அறிந்து அவர்களின் தேவையை உணர்ந்து இரக்கத்தோடு செயல்படுவது கனிவு.

திருப்பாடல் 103:2 ல் "ஆண்டவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே" என்று திருப்பாடல் ஆசிரியர் கூறிவிட்டு, பின்வரும் வசனங்களில் ஆண்டவர் செய்த அனைத்து கனிவான செயல்களையும் பட்டியலிடுவார். "குற்றங்களை மன்னிக்கிறார், நோய்களை குணமாக்குகின்றார், படுகுழியினின்று மீட்கின்றார், மனித வாழ்நாளை நலன்களால் நிரப்புகின்றார்" என்று கடவுளின் செயல்பாடுகளை வரிசைப்படுத்துவார். கனிவு இருக்கின்ற இடத்தில் நன்மை இருக்கும் என்பதை இத்திருப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

மத்தேயு 5:5 ல் "கனிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" என்று இயேசு தம் மலைப்பொழிவில் அழகாகச் சொல்வார். கனிவான பேச்சைப் பேசுவோர் மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடித்துக்கொள்வர் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகின்றார்.

அன்பான பார்வையும், கனிவான பேச்சும் ஒரு மனிதனிடத்தில் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். யாருடைய மனமும் புண்படாமல் இதமாகப் பேசுவதும், அன்பு நிறை இரக்கச் செயல்களைச் செய்வதும் நல்ல மனநிலையைக் குறிக்கிறது. இந்த மனநிலையானது





## அன்னையின் திருத்தலங்களை நோக்கி... 46

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., மாமல்லபுரம்.



### புனித பனிமய மாதா ஆலயம், தெற்கு கள்ளிக்குளம்

தமிழகத்தில் கிறிஸ்தவம் வேரூன்றி வளர ஆரம்பித்த காலத்திலிருந்தே கிறிஸ்தவம் தழைத்த இடங்களில் ஒன்று கள்ளிக்குளம் ஆகும். அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்த காவல்கிணறு என்ற ஊரில் ஒரு விதவை தாயும், அவரது மகன் சவரிமுத்து என்பவரும் வாழ்ந்து வந்தனர். இந்த சவரிமுத்துதான் விசுவாச ஒளியை கள்ளிக்குளத்திற்கு கொணர்ந்தவர். சவரிமுத்து கி.பி. 1767ஆம் ஆண்டு வடக்கன்குளத்திலிருந்த பரலோகமாதா ஆலயத்தில் திருமுழுக்கு பெற்றார். பின் தன் தாயுடன் சில காலம் காவல்கிணற்றில் வசித்து வந்தார். தன் திருமணத்திற்கு பிறகு வாழ்வாதாரத்தைத் தேடி கள்ளிக்குளத்தில் குடியேறினார். தான் வசிப்பதற்காக ஒரு ஓலைக் குடிசையையும் கட்டினார். இவரது மகன் வியாகப்பன் கள்ளிக்குளத்தையே தன் சொந்த ஊராகக் கருதி வாழ்ந்து வரலானார்.

இக்குடும்பம் முழுவதிற்கும் அன்னையின் மீது அளப்பரிய பக்தி உண்டு. அன்னைக்கு வணக்கம் செலுத்தாமல் ஒருநாள் கூட அவர்கள் இருந்ததில்லை. தாங்கள் வசித்த குடிசைக்கு அருகிலேயே அன்னை வீற்றிருக்க ஒரு குடிசை கட்டினர். காலப்போக்கில் அக்குடிசை ஒரு சிற்றாலயமாக உருவெடுத்தது. கி.பி. 1838ஆம் ஆண்டு அருட்பணி. அலெக்ஸாண்டர் மார்டின் சே.ச அவர்கள் கள்ளிக்குளத்திற்கு அருட்பணி. மோசேட் சே.ச அடிகளாருடன் வந்து இறைபணியாற்றினார். இவர்களுக்குப் பின் அருட்பணி. கிரகோரி சே.ச அடிகளார் பங்குத் தந்தையாக பணியாற்றினார்.

இப்பணித்தளத்தில் பணியாற்றியவர்களில் மிக முக்கியமானவர் அருட்பணி. விக்டர் டெல்பெக் சே.ச ஆவார். இவர் தன் பணிக்காலத்தில் அன்று நிலவிய சமூக சூழல்களின் காரணமாக ஏராளமான சவால்களை சந்தித்தார். தன் செப வாழ்வினாலும், நிதானத்தாலும், அனைவரையும் அரவணைக்கும் பண்பாலும் எல்லா சூழல்களையும் எதிர்கொண்டு வெற்றி கண்டார்.

இவரின் அளப்பரிய சாதனைகளுக்குத் தொடக்கமாக அமைந்தது அவர் கி.பி. 1865 ஆம் ஆண்டு கள்ளிக்குளம் குன்றின் மீது நாட்டிய சிலுவையாகும். இன்றளவும் வானுயர்ந்து நிற்கும் இச்சிலுவை அப்பகுதி மக்களின் விசுவாசத்திற்கு சான்றாக விளங்குகிறது என்றாலும், அச்சிலுவை நாட்டப்பட்ட காலகட்டத்தில் அருட்பணி. விக்டர் அவர்கள் அடைந்த துன்பங்களுக்கு அளவே இல்லை. பிற மத மக்களினால் இழைக்கப்பட்ட துன்பங்களை தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். அவரின் பொறுமைக்கு கிடைத்த பரிசு இன்றும் நிலைத்து நிற்கும் இச்சிலுவை மரமாகும். குன்றின் மீது இடப்பட்ட விளக்காக இச்சிலுவை திகழ்கிறது.

பல்வேறு சவால்களை மேற்கொண்டு வாழ்ந்த அடிகளாரின் உடல் நிலை மோசமாகவே, அவர் தன் தாயகம் திரும்பினார். உடல் நலம் பெற அவர் சிகிச்சை

பெற்ற காலம் முழுவதும் அவருடைய சிந்தனைகள் முழுவதும் இந்தியாவிலேயே அதிலும் குறிப்பாக தன் பணித்தளங்களைப் பற்றியே இருந்தன. சிகிச்சை முடிந்ததும் கி.பி. 1875ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் நாள் தந்தையவர்கள் திருச்சி திரும்பினார். அருட்பணி. விக்டர் அவர்கள் இந்தியா திரும்பி விட்டார், அதுவும் திருச்சிக்கு வந்துவிட்டார் என்பதை அறிந்த கள்ளிக்குளம் மக்கள் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள்.

தங்களின் பிரச்சினைகளுக்கு ஒரு விடிவுகாலம் வந்துவிட்டதாகக் கருதினர். ஏனென்றால், அக்காலக்கட்டத்தில் அப்பகுதி முழுவதும் சாதி பிரச்சினைகளால் பீடிக்கப்பட்டிருந்தது. மக்களின் வேண்டுகோளையும், மதுரை பணித்தளத்தின் பொறுப்பாளர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க அவர் கி.பி. 1875ஆம் ஆண்டு ஜீலை 19ஆம் நாள் கள்ளிக்குளம் வந்தடைந்தார். கள்ளிக்குளத்தில் கால் வைத்தவுடன் கலங்கிப் போனார் அருட்பணி. விக்டர் அவர்கள். கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த சாதிப்பிரச்சினைகளை தன்னால் தீர்க்க முடியுமா என்கிற சந்தேகம் அவரது உள்ளத்தில் தோன்றியது. செபத்தாலும், சாந்த உள்ளத்தாலும், உறுதியான மனப்பான்மையாலும் எதையும் சாதிக்கலாம் என்பதை நிருபிக்கும் வகையில் சாதிப் பிரச்சினைகளுக்கு தீர்வு கொணர்ந்து, கி.பி. 1876ஆம் ஆண்டு ஜீலை 31ஆம் நாள் கள்ளிக்குளத்தில் அமைதியை நிலைநாட்டினார்.

அலைகடலில் திசை தெரியா கப்பலாக தவித்த கள்ளிக்குளத்திற்கு கலங்கரை விளக்கமாக விளங்கிய அன்னை மரியாவிற்கு ஒரு பெரிய ஆலயம் கட்ட விரும்பினார் தந்தை அவர்கள். இவரே, கள்ளிக்குளம் பனிமய மாதா ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டியவர் ஆவார். கி.பி. 1884ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. கி.பி. 1885ஆம் ஆண்டு கட்டிட பணிகள் தொடங்கின. இவரது நினைவாக, இன்றும் இந்த ஆலயம் சுவாமி ஜெகநாதர் (விக்டர் என்பதன் தமிழாக்கம் ஜெகநாதர் என்பதாகும்) ஆலயம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆலயத்திற்கு இடம் தேர்ந்தெடுத்துக் கொடுத்தது அன்னையே. அந்நிகழ்வு பின்வருமாறு:

கள்ளிக்குளம் தோன்றிய காலத்தில் அங்கிருந்த நிலங்களை அப்பகுதியில் வாழ்ந்த மக்களே தங்களுக்குள் பிரித்துக் கொண்டு வாழ்ந்தனர். புதிதாக வந்து குடியேறுபவர்கள் தங்களுக்கு வாழவும், விவசாயம் செய்யவும் இடம் வேண்டும் என்று எண்ணுகிற பட்சத்தில் ஊர் தலைமை பொறுப்பாளரிடம் ஒரு ரூபாயும், வெற்றிலையும் வைத்துக் கொடுக்க, அவர் அளந்து ஒரு நிலத்தை அவர்களுக்குக் கொடுப்பார், அவர்களும் அதில் வீட்டைக் கட்டிக் கொள்வர், மேலும் விவசாயம் செய்தனர். இந்த நடைமுறையை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இக்காலக் கட்டத்தில் அப்பகுதியில் வசித்த மற்றொரு சாரார் இம்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர். அக்காலத்தில் திருநெல்வேலியில்தான் கோர்ட் இருந்தது. கோர்ட்க்கு செல்ல வேண்டியவர்கள், தங்களுக்கு வசதியில்லாத காரணத்தினால் உணவைக் கட்டிக் கொண்டு நடந்தே திருநெல்வேலி செல்வர். அங்கனம், ஒரு முறை வழக்கின் வாய்தாவுக்காக ஊர்த் தலைவர் செல்ல வேண்டியிருந்தது. அன்று இரவு தூங்கிக் கொண்டிருக்கும் போது, ஒரு பெண் கையில் குழந்தையுடன் கனவில் தோன்றி, ‘எல்லாருக்கும் நிலம் அளந்து கொடுக்கிறாய். ஆனால், எனக்கு ஒன்றும் தரவில்லையே’ என்றாராம். அவர் அதை கனவு என்று கூட அறியாமல், நாளை நான் திருநெல்வேலி போகிறேன். நீங்கள்







நிற்பதாக காட்டப்படுகிறது. மாற்கு 3:20-35 ஐ நாம் வாசிக்கும்போது இப்படிப்பட்ட கருத்து நம்மில் உருவாகிறது. ஒருவேளை அவருடைய விசுவாசம் அவரால் இருந்திருக்கலாம். இயேசுவின் உயிர்ப்பிற்கு பிறகு அது மாறியிருக்கலாம் அதைப் பற்றி நற்செய்தி குறிப்பிடவில்லை. மாற்குவின் இந்த மரியா உருவத்தைப் பார்க்கும்போது இக்கருத்து 6:4 ல் புலப்படுகிறது. “தன் சொந்த ஊரிலும்,சுற்றத்திலும், சொந்த வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர்களுக்கு மதிப்பு உண்டு.”



ஆனால் மத்தேயுவும் லூக்காவும் சற்று வித்தியாசமாக மரியாவை உருவகப்படுத்துகின்றனர். இருவரும், மாற்கு குறிப்பிடும் நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துகின்றார்கள். ஆனால் சில மாற்றங்களை செய்வதைப் பார்க்கலாம். இருவரும் மாற்குவின் 30:20-21 “அவருடைய உறவினர்கள் இதைக் கேள்விப்பட்டு, அவரைப் பிடித்துக் கொண்டுவரச் சென்றார்கள். ஏனெனில் அவர் மதிமயங்கி இருக்கிறார் என மக்கள் பேசிக் கொண்டனர்.” லூக்கா இன்னும் பெரிய மாற்றத்தை செய்கிறார். “யார் என் தாய், சகோதரர்” என்ற வார்த்தைகளை நீக்கிவிட்டார். மேலும் பெயல்சபூல் பற்றிய வாக்கு வாதத்தை (11:14-25) வேறொரு சூழ்நிலைக்குக் கொண்டு செல்வதையும் பார்க்கின்றோம்.

இறைவனின் விருப்பப்படியும், கடவுளின் வார்த்தையின்படியும் நடப்பவர்கள்தான் கிறிஸ்து உருவாக்கும் விசுவாசக் குடும்பத்தின் உறுப்பினர்களாக இருக்கமுடியும் என்பதை மத்தேயுவும், லூக்காவும் வலியுறுத்திக் காட்டியுள்ளனர். மரியா இந்த இயேசுவின் விசுவாச குடும்பத்தின் ஒரு உறுப்பினர் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார். குழந்தை பருவ நிகழ்வுகளில் மரியா நல்லதொரு ஒளியில் காட்டப் படுவதால் இப்படிப்பட்ட ஒரு மாறுதல் மிக அவசியமாக இருந்தது. தொடக்கத்திலிருந்தே மரியா, இயேசுவின் விசுவாசக் குடும்பத்தின் சிறந்த முதல் உறுப்பினராகவும், முதல் சீடத்தியாகவும் விளங்குகின்றார். லூக்கா இவ்வுண்மையை தெளிவாகக் காட்டுகின்றார். இவ்வாறு மரியாவைப் பற்றிய கருத்து படிப்படியாக முன்னேறி, லூக்கா நற்செய்தியில் மரியாள் முதல் சீடத்தியாக மாறுகின்றார்.

தாவீதின் மகன் என்று அழைக்கப்படுகின்றார். எசாயாவின் இறைவாக்கு இவ்வாறு நிறைவேறுகிறது என்று மத்தேயு காட்டுகின்றார்.

கடவுளின் மீட்புத் திட்டத்தில் மரியா ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றார். இதை ஏற்கனவே எசாயா முன்னறிவித்ததைப் பார்க்கின்றோம். இயேசுவின் குழந்தை பருவ கால கட்டத்தில் மரியாவின் மனநிலை மற்றும் பங்கு என்ன என்பதை மத்தேயு விளக்கவில்லை. ஆனால் லூக்கா நற்செய்தியாளர் விரிவாக விளக்குகின்றார். யோசேப்பு இயேசு என்னும் பெயரைச் சூட்டியதால், யோசேப்பின் மகனாகவும், தாவீதின் மகனாவும் மாறுகின்றார் என்று மத்தேயு அழுத்தம் திருத்தமாக விளக்குகின்றார். மத்தேயு நற்செய்தியில் யோசேப்பும் , லூக்கா நற்செய்தியில் மரியாவும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள் என அறிகின்றோம்.

**இயேசுவின் சகோதரர்கள்**

சகோதரர்கள் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல அர்த்தங்களில் கையாளப்படுகிறது. உடன்பிறந்த இரத்த உறவால் இணைக்கப்பட்ட சகோதரனை குறிக்கலாம் ஒரே மதத்தைச் சார்ந்த அயலானைக்குறிக்கலாம் ( உரோ 9:3). தந்தையின் மற்ற மனைவியருக்குப் பிறந்த சகோதரனைக் குறிக்கலாம் (மாற்கு 6:17-18) கிரேக்க பழைய ஏற்பாட்டு காலத்தில், சொந்தக்காரன், உறவினன் இவர்களையும் குறிக்கலாம் (தொடக்க நூல் 29: 12,24,48)

மத்தேயு நற்செய்தியில் 12,16; 13:55-56 ல் உள்ள சகோதர சகோதரிகள் எந்தப் பொருளில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்பதில் சர்ச்சை உள்ளது. இங்கே கூறப்பட்டிருக்கும் சகோதர சகோதரிகள் மரியாவின் குழந்தைகள் இல்லை எனக் கருதினால் அதற்குரிய காரணங்களை விளக்கவேண்டும். அப்படிக் காரணங்களை விளக்கும்போது கீழக்கண்ட விளக்கங்கள் கூறப்படுகின்றன. 1. யோசேப்பின் இறப்பிற்கு பிறகு அவனுடைய சகோதரி பிள்ளைகள் மரியாவை கவனித்து வந்தனர். 2. யோசேப்பு தனது முந்தைய திருமணத்தில் பெற்றெடுத்த பிள்ளைகளை குறிப்பதாக யோசேப்பு நற்செய்தி குறிப்பிடுகிறது. திருச்சபை தொடக்க காலம் முதல் மரியா கன்னியாக இருந்தாள் என நம்பியது. இதுவே இன்றைய திருச்சபையின் நிலைப்பாடு ஆகும்.

**இயேசுவின் பொதுப்பணி காலத்தில் மரியா**

மாற்கு நற்செய்தியின்படி மரியா, இயேசுவின் பணி வாழ்வின்போது நம்பவில்லை. சீடர்கள் கூட்டத்திலிருந்து வெளியே





கணக்குப்பிள்ளையிடம் சென்று ஒரு ரூபாயும், வெற்றிலையும் கொடுத்து நிலத்தை அளந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்றாராம். தலைவரும் திருநெல்வேலிக்கு வழக்குக்காக சென்று திரும்பி வந்து கணக்கப்பிள்ளையிடம், ஒரு பெண் கைக்குழந்தையுடன் வந்து நிலத்தை பெற்றுக் கொண்டாரா என்று வினவ, அவர் இல்லை என்றார். குழம்பிய மனநிலையில் இருந்த தலைவருக்கு அந்நாளில் அணைக்கரைக்கு வடக்கன்குளத்திலிருந்து மறையைப் போதிக்க செல்லும் குருவானவர் கண்ணில் பட்டார். அவரிடம் தான் கண்ட கனவை கூறியவுடன், அக்குருவானவர், உங்களிடம் இடம் கேட்டவர் அன்னை மரியாள்தான் என்று விளக்கிக் கூறினார். உடனே, ஒரு இடம் அளக்கப்பட்டு அன்னையின் ஆலயத்திற்காக வழங்கப்பட்டது. அந்த இடத்தில், ஒரு சிறு குடிசைக் கோயில் கட்டப்பட்டு ஆராதனைகளும், செபங்களும் நடந்தன. அப்போது, நிலப்பிரச்சினைகளுக்கான மூன்றாவது வாய்தா வந்தது. என்ன நடக்கப் போகிறதோ என்கிற கவலையோடு தலைவர் உறங்கச் செல்ல, கனவில் தோன்றிய அன்னை மரியாள், கவலைப்படாதீர், நாளை நல்ல தீர்ப்பே வரும் என்று கூறி மறைந்தார். அவர் கூறியது போலவே, அடுத்த நாள் அளிக்கப்பட்ட தீர்ப்பில். நிலத்தில் வசிப்பவருக்கும், விவசாயம் செய்பவருக்கும்தான் நிலம் உரிமையாகும் என்று கூறப்பட்டது. கிராமமே மகிழ்ச்சியில் திளைத்தது. தங்களின் துன்பங்களை உணர்ந்து வழிகாட்டிய அன்னைக்கு நன்றி செலுத்தினர்.

வழக்கின் தீர்ப்புக்குப் பிறகு நிலத்தை அவர்களுக்குள் பிரிப்பதிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன. வழக்கிற்காக பணம் செலவழித்த செல்வந்தர் ஒருவர், நிலத்தில் பாதி தனக்கும் வேண்டும் என்று கோரிப் பெற்றுக்கொண்டார். ஆனால், சில நாட்களிலே அவரின் ஒரே மகன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனான். தன்னுடைய செயல்களுக்காக வருந்திய அவர், தான் பெற்ற நிலம் முழுவதையும் அன்னையின் பெயருக்கு எழுதிவைத்துவிட்டு ஊரை விட்டே சென்று விட்டார். இது அனைவருக்கும் மன வருத்தத்தைத் தந்தாலும், கோர்ட் தீர்ப்பு மூலம் தங்களுக்கு இடம் பெற்றுத் தந்த அன்னையை தங்களின் தாயாக நேசிக்கத் தொடங்கினர்.

காவல்கிணற்றிலிருந்து சவரிமுத்து என்பவர் தன்னுடைய மைத்துனருடன் இங்கு வந்து வசிக்கத் தொடங்கினார். மறையை பின்பற்றுவோரின் எண்ணிக்கை அதிகமானது. இருந்த சிற்றாலயம் வழிபாட்டிற்கு இடம் போதவில்லை. இச்சூழலில் சவரிமுத்து தன் சொந்த செலவில் ஆலயத்தை விரிவுபடுத்திக் கட்டினார். எனவே, ஊர் மக்கள் அவரையே தர்மகர்த்தாவாக நியமித்தனர். ஊரில் முதலில் வந்து குடியேறியவர்கள் கணக்குபிள்ளையாகவும், உபதேசியார்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

கி.பி. 1884ஆம் ஆண்டு புதிய ஆலயம் கட்ட திட்டமிடப்பட்டது. ஊரார் அனைவரும் கூடிப் பேசினர். ஆலயம் கட்ட தகுந்த இடத்தை தேர்வு செய்வதில் சுனக்கம் ஏற்பட்டது. எந்தவொரு முடிவுக்கும் வர இயலாத சூழலில், அன்னையே இடத்தைக் காட்டுவார் என்று சொல்லி அனைவரும் அவரவர் இல்லம் சென்றனர். மறுநாள் காலை ஊரெல்லாம் பரபரப்பு. முந்தைய நாள் ஊர் கூடிப் பேசிய இடத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பனி பெய்திருந்தது. அன்னை தன் ஆலயத்திற்கான இடத்தை தேர்ந்து கொண்டார் என்று சொல்லி, அங்கேயே ஆலயம் கட்டத் தொடங்கினர்.

மக்கள் அளித்த நன்கொடையாலும், அவர்களின் கடின உழைப்பாலும் ஆலயப் பணிகள் விரைந்து நடைபெற்றது. இன்று வானுயர்ந்து நிற்கும் ஆலய கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட கலவையே சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது. இந்த கலவையை செய்யும் முறையே வித்தியசமானதாக இருந்தது. சுண்ணாம்பையும், மணலையும் முதலில் அரைத்துக் கொள்வார்கள். பின் பதனீர் கலந்து குழைக்கும் போது அது ஒரு பிசின் போல மாறிவிடும். பதனீர் கொண்டு குழைக்கப்பட்ட சாந்தை, சுட்ட செங்கற்கள் வைத்து ஆலயம் முழுவதையும் கட்டினர். ஆலயம் 192 அடி நீளமும், 90 அடி அகலமும் உடையதாக அமைந்தது. இந்த ஆலயத்தின் மையத்தின் உள்ள கோபுரம் 183 அடி உயரமும், பக்கவாட்டு கோபுரங்கள் 65 அடி உயரமும்

கொண்டுள்ளன. மைய கோபுரத்தின் உச்சியில் 7 அடி உயரமுள்ள சிலுவை நிறுவப்பட்டுள்ளது. இச்சிலுவையானது திருச்சியிலிருந்து வரவழைக்கப்பட்டது.



இப்பணித்தளத்தில் பணியாற்றிய ஒவ்வொருவரும் மிகுந்த சவால்களுக்கிடையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர். அருட்பணி அத்ரியான் கௌசானல் சே.ச அவர்கள் கி.பி. 1915 முதல் கி.பி. 1922 வரையிலும், பின் கி.பி. 1924 முதல் 1928 வரை கள்ளிக்குளத்தின் பங்குப் பணியாளராக பணியாற்றினார். இவரது பெரும் முயற்சியால் பிரான்சு தேசத்திலிருந்த அன்னையின் திருச்சுரூபங்கள் மூன்று இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டன. அதில் ஒன்று கள்ளிக்குளம் அதிய பனிமய மாதா ஆலயத்தில் நிறுவப்பட்டது. இது போன்று இங்குள்ள நற்கருணைப் பேழை, சுற்றுப்புறம் எங்கும் இனிய ஓசை எழுப்பி இறைப்பிரசன்னத்தை உணர்த்தும் ஆலய மணி போன்றவை இவரால் பிரான்சு தேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டதாகும்.ஆலயப் பீடத்தில் உள்ள அன்னையின் திருச்சுரூபம், புனித சூசையப்பர் சுரூபம் மற்றும் திரு இருதய ஆண்டவர் சுரூபம் முதலியனவும் பிரான்சிலிருந்து வரவழைக்கப்பட்டதாகும்.

அக்கால கட்டத்தில் கள்ளிக்குளம் சுற்றுவட்டாரத்தில் திருடர்கள் பயம் அதிகமாக இருந்தது. பாதுகாப்பான வாழ்வு வாழ விரும்பிய ஒவ்வொருவரும் கள்ளிக்குளத்திற்கு இடம் பெயர்ந்தனர். அன்னையின் அரவணைப்பில் வாழ்வதை பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் மக்கள் எண்ணி வாழ்ந்தனர். இறைமக்களின் எண்ணிக்கையும் இங்கனம் கள்ளிக்குளத்தில் அதிகமாகியது. சிலுவைப்பட்டடி, பண்ணையப்பனை முதலிய ஊர்களிலிருந்து மக்கள் கள்ளிக்குளம் வந்து சேர்ந்தனர்.

ஆலயத்திற்கு முன் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட 35 அடி உயர கொடி மரம் நிறுவப்பட்டது. ஆலயம் கட்டி எழுப்பபட்ட 125 ஆண்டு வைடூரிய விழாவை முன்னிட்டு கி.பி. 2010 ம் ஆண்டு 85அடி உயர புதிய கொடி மரமானது நிறுவப்பட்டுள்ளது.

கி.பி. 1884ஆம் ஆண்டு ஆலயத்திற்கு அற்புதமான முறையில் ஆலயத்திற்கான இடத்தை சுட்டிக்காட்டிய அன்னை மரியாள் 55 ஆண்டுகளுக்கு பிறகு, அதாவது கி.பி. 1939 ஆண்டு தோன்றி தனக்கென ஒரு கெபி கட்டும்படி அழைப்பு விடுத்தார். கி.பி. 1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 நாள், வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் 6 சிறுவர்கள், ஞானதிக்கம், எஸ்.பி.ஜான், எம்.ஜி.தாமஸ் (இவர் இன்றும் வாழ்ந்து வருகிறார்), டி.தாசன், ஆர்.தாசன், எம்.எ.தாசன் ஆகியோர்கள் பள்ளிவிட்டதும் ஊரின் தென்புறம் உள்ள ஓடைப்பகுதிக்கு விளையாடச் சென்றனர். விளையாடி முடித்ததும் மாலை 6 மணியளவில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் பாறைகிணறு அருகே வந்து கொண்டிருந்த போது ஒரு பிரகாசமான ஒளி அவர்களை கடந்து சென்றது. அவர்கள் ஒளி வந்த மலையின் திசையை திரும்பிப் பார்த்தனர்.

வடபுறமுள்ள மலையின் உச்சியில் கைகளை கூப்பிய வண்ணமாய் முக்காடு அணிந்த அன்னை நின்று கொண்டிருந்தார். அவர் பனிமய மாதா ஆலயத்தை நோக்கி நின்று கொண்டிருந்தார். அவர் நின்ற இடத்திற்கு பின்னால் ஒரு ஓடை தோன்றி கீழ்ப்புறம் உள்ள பாழும் கிணறு என்றழைக்கப்படும் இடத்தில் போய் விழுந்தது. சிறிது நேரத்தில் காட்சி மறைந்தது.





# மரியா - கடவுளின் கடிதம்

15



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## இயேசுவின் பிறப்பில் மரியாவின் பங்கு (லூக்கா 1: 18-25)

தலைமுறை அட்டவணையில் யோசேப்பின் மகன் இயேசு என குறிப்பிடப்படவில்லை. எனவே இப்பகுதியில் இயேசு பிறந்த முறையை விளக்கிச் சொல்லுகிறார். இயேசு பிறந்த விதத்தை புரிந்து கொள்ள வேண்டுமென்றால் யூதர்களின் திருமண முறையை அறிந்துகொள்ள வேண்டும். யூதர்களின் திருமணத்தில் இரண்டு படிநிலைகள் உள்ளன. முதற்படிநிலை "எருசின்" என்று அழைக்கப்படுகிறது. அதாவது "திருமண ஒப்பந்தம்" என்ற நிலை. இதன்படி ஆண் பெண்ணின் மேல் முழு உரிமையை பெறுகின்றான். இதுமுதல் பெண் மனைவி என்று அழைக்கப்படுகின்றாள். இருப்பினும் ஏறத்தாழ 1 வருடம் மனைவி தன் பெற்றோர்களுடன் வசிக்கின்றாள். இரண்டாம் படிநிலை "நிதயின்" என்று எபிரேய மொழியில் அழைக்கப்படுகின்றது. இதன்படி மணமகன், மணமகளை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தாம்பத்திய வாழ்வில் ஈடுபடுகின்றான்.

மரியாவும் யோசேப்பும் இந்த இரண்டு படிநிலைகளுக்குள் இருக்கும்போதுதான் மரியா கருவுற்று இருப்பது யோசேப்பிற்கு தெரிய வருகிறது. கபிரியேல் தூதரின் வாழ்த்துச் செய்தியும் தூய ஆவியின் வல்லமையில் மரியா கருவுற்றிருப்பதும் யோசேப்பிற்கு தெரியாது. அவர் நீதிமானாக இருந்ததால் மரியாவை விலக்கிவிடலாமா என சிந்திக்கின்றார். இணைச்சட்டம் 22:20-21 ன் படி கணவனோடு கூடிவாழ வருமுன் மனைவி கன்னியாக இல்லாவிட்டால் அவளை கல்லால் எறிந்து கொல்லலாம் அல்லது அதற்கு குறைவான தண்டனையாக மணமுறிவு கொடுக்கும் பழக்கம் யூதர்களிடையே இருந்தது.

இச் சூழ்நிலையில்தான் வானதூதர் யோசேப்புக்குத் தோன்றி இரண்டு அடிப்படையான உண்மைகளை கூறுகின்றார். 1 . மரியா எவ்வாறு கருவுற்றாள் எனவும் 2. மரியாவை தன் மனைவியாக ஏற்றுக் கொண்டு, பிள்ளைக்கு பெயர்சூட்ட வேண்டும் என்றும் பணிக்கின்றார். யோசேப்பு தன் பிள்ளைக்கு பெயர் சூட்டுவதால் அவர் வழியாக இயேசு



# முத்திப்பேறு பெற்ற பாடுகளின் மரியா கவுதலுபே ரிக்கார்ட் ஓல்மோஸ்




**அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச**

முத்திபேறு மரியா கவுதலுபே 1881 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் நாள் ஸ்பெயினில் உள்ள ஆல்பால் என்ற ஒரு சிறிய ஊரில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் இவருக்கு மரிய பிரான்செஸ்கா என்று திருமுழுக்கின்போது பெயர் சூட்டினர். சிறுவயதிலிருந்தே புதியதான செயல்களை முயற்சி செய்வதிலும், சுறுசுறுப்பாகவும், துணிச்சலாகவும் விளங்கிய மரிய பிரான்செஸ்கா, 1896 ம் ஆண்டு ஜீன் 11ம் நாள், மரியின் ஊழியர் கன்னியர்கள் மடத்தில், தனது தொடக்கநிலை துறவற வாழ்க்கையை தொடங்கினார். 1900 ம் ஆண்டு ஜீன் 11 ம் நாள் இறுதி வார்த்தைப்பாட்டின் மூலம் இறைப்பணிக்காக தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தாள். இந்த நல்ல தருணத்தில் தன்னுடைய பெயரை மரிய கவுதலுபே என்று மாற்றிக் கொண்டாள். அவள் மிகப்பெரிய புதுமைகள் செய்யாவிட்டாலும், மிகவும் எளிமையாகவும், நம்பகத்தன்மை உடையவளாகவும இருந்தாள். எனவே, இவளை மடத்தின் தலைமைச் சகோதரியாக தேர்வு செய்தார்கள். தனது பொறுப்பை சிறப்பாக செய்து வந்த இந்த தருணத்தில் 1936 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டு ஆயர்கள், ஆட்சியில் இருந்த அரசியல் கட்சியை ஆதரவு செய்ததால், கலகம் செய்பவர்களின் கோபம் கிறிஸ்தவ மதம் மீது திரும்பியது. கலகக்காரர்கள் குருக்களையும், துறவிகளையும் கொன்று குவிக்க ஆரம்பித்தார்கள். இந்நிலையில் நமது மரிய கவுதலுபே தனது சகோதரிகளை “நம்மை காணிக்கையாக்குவதற்கு தயாராக இருப்போம்” என்று ஊக்கப்படுத்தினாள். அதே ஆண்டு, கலகக்காரர்களால் அனைத்து கன்னியர்களும் மடத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். கிறிஸ்தவ சமயத்தை மறந்துவிட, அவர்களுக்கு மரண எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. மரிய கவுதலுபே தனது சொந்த சகோதரியின் வீட்டிற்குச் சென்று தனது துறவற வாழ்க்கையைத் தொடர்ந்தாள். இதை அறிந்த கலகக்காரர்கள், அக்டோபர் மாதம் 2 ஆம் நாள் நள்ளிரவில் வந்து அவளை இழுத்துச் சென்றனர். அவளிடம் “ நீ துறவியா?” என்று கேட்டதற்கு, “நான் ஒரு துறவி இன்னும் எத்தனை முறை பிறந்தாலும் மரியின் ஊழியர் சபையின் துறவியாகத்தான் மாறுவேன்” என்று துணிச்சலோடு பதில் கூறினாள். கோபமுற்ற கலகக்காரர்கள் ஊருக்கு வெளியே அவளை இழுத்துச் சென்று , துண்டுதுண்டாக அவளை வெட்டிக் கொன்றார்கள். கிறிஸ்துவுக்காக துணிச்சலுடனும், வீரத்துடனும் வாழ்ந்து மரித்தார் நமது முத்திப்பேறு மரிய கவுதலுபே. 1999 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் மரிய கவுதலுபேவை ஒரு மறைசாட்சியாக பிரகடனப்படுத்தினார். 2001 ம் ஆண்டு மார்ச் 11 ஆம் நாள் அவளை முத்திபேறு பெற்றவளாக அறிவித்தார்.





தாங்கள் கண்ட காட்சியால் பிரமித்துப் போய் நின்ற சிறுவர்கள், ஊருக்குள் திரும்பி தாங்கள் கண்ட காட்சியை மக்களுக்கு எடுத்துரைத்தனர். அச்சிறுவர்களின் கூற்றை நம்பியவர்கள் ஒரு சிலரே. திரண்டிருந்த ஊரே நம்பிக்கையில்லாமல் அவர்களை பார்த்தது. பொய் பேச வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்தனர் ஊர்ப் பெரியவர்கள். இறுதியில், சிறுவர்கள் சொன்ன இடத்தை மறுநாள் சென்று பார்க்க முடிவெடுக்கப்பட்டு, அங்கு எந்த அடையாளமும் இல்லையென்றால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டனர். மறுநாள் ஊரே திரண்டு மலையை நோக்கிச் சென்றனர். சிறுவர்கள் சுட்டிக்காட்டிய இடத்தில் அன்னையின் பாதம் பதிந்திருந்ததையும், சிறுவர்கள் சொன்ன முன்பில்லாத நீரோடை இருப்பதையும் கண்டு, கண்களில் கண்ணீர் மல்க ஊரே முழந்தாள் படியிட்டு அன்னையின் அருட்கருணைக்காக நன்றி செலுத்தி செபித்தனர்.

இவ்வரிய நிகழ்வு நடைபெற்ற போது பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி. மரியானுஸ் அடிகளார், அன்று பள்ளியின் தலைமையாசிரியராக இருந்த லட்சுமண அய்யரிடம் சென்று நடந்ததை விவரித்தார். அருட்பணியாளரின் முன் அந்நிகழ்வு உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறிய லட்சுமணன், அவர் சென்ற பிறகு அந்நிகழ்வு உண்மையாக இருக்க முடியாது என்று சொன்னார். மாணவர்கள் ஆசிரியர் சொன்னதுதான் உண்மையாக இருக்க வேண்டும் என்று நம்பினர். ஊர் முழுவதும் இப்பேச்சு பரவியது. பங்குத் தந்தையின் காதுகளுக்கு இச்செய்தி வந்ததும், ஊராரைக் கூட்டி, அன்னையின் காட்சி உண்மையானால் இன்று ஊரில் பெருமழை பெய்யும் என்று கூறினார். சுட்டெரிக்கும் வெயில் அடிக்கும் மார்ச் மாதத்தில் மழை எப்படி பெய்யும் என்ற கேள்வியை மக்கள் மனதில் கேட்டுக் கொண்டர். மக்கள் கலைந்து சென்றனர். கருமேகம் திரண்டு வந்து பெரும் மழை பெய்தது. மாலை பள்ளி விட்டும் மாணவர்கள் வீடு திரும்ப முடியாத அளவுக்கு மழை பெய்தது. லட்சுமண அய்யர் தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார். இந்த மழையானது கள்ளிக்குளத்தில் மட்டும் தான் பெய்தது என்பது சிறப்பு. அருட்பணியாளரின் வார்த்தை உண்மையானது. தான் காட்சி கொடுத்ததும் உண்மையே என்பதை நிலைநாட்டிய அன்னைக்கு ஒரு கெபி மலையின் மீது கட்டப்பட்டது. சாரை சாரையாய் வந்த மக்கள் வெயிலில் தவிப்பதைக் கண்டு அங்கு நிழலுக்காக ஒரு தட்டுப்பந்தல் போடப்பட்டது.

கி.பி. 1940 ஆம் ஆண்டு திருவிழாவிற்கு வந்த தூத்துக்குடி ஆயர் மேதகு பிரான்சிஸ் திபூர்ச்சியுஸ் ரோச் ஆயர் அவர்களால் ஆகஸ்டு மாதம் 3ஆம் நாள் மலைக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அன்னை காட்சி கொடுத்த பொன்விழாவின் நினைவாக மலைப் பாதையின் தொடக்கத்தின் அழகான வளைவு ஒன்று கி.பி. 1989 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

மலைமீது ஏற படிக்கட்டுகள், கைப்பிடிகள், புனிதர்களின் திருஉருவங்கள், அன்னையின் பாதம் படிந்த புனித பூமியைச் சுற்றி பக்தர்கள் அமர வசதி, சிலுவையடியில் நிற்கும் அன்னை மரியாள், மரித்த ஆண்டவரின் திருஉருவம் என நம்மை ஆன்மீகத்தில் திளைக்க வைக்கும் புனிதத்துவம் நிறைந்த இடமாக உள்ளது.

கள்ளிக்குளம் அன்னையின் மலைமீது ஏறி சுற்றிப்பார்த்தால் சுற்றிலும் மலைமுகடுகளும், அவற்றுக்கிடையே தவழ்ந்து விளையாடும் மேகங்களும், கண்ணுக்கு எட்டும் தூரம் வரை உள்ள காற்றாலை விசிறிகளும் நம் பார்வைக்கு விருந்தளிக்கின்றன. இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தது போல வானுயர்ந்து நிற்கும் பனிமய மாதா அன்னை ஆலயத்தின கோபுரங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள புனித மைக்கேல், புனித அந்தோணியார் ஆலய கோபுரங்களும் நாம் விண்ணகத்தில் உள்ளோமா அல்லது மண்ணகத்தில் உள்ளோமா என்கிற எண்ணத்தை உருவாக்குகின்றன.

இந்தியாவின் முதல் பொதுநிலைப் புனிதர் தேவசகாயம் அவர்களின் திருத்தலத்திற்கு செல்வோர், தாங்கள் செல்லும் வழியிலேயே அமைந்துள்ள கள்ளிக்குளம் புனித பனிமய மாதா திருத்தலத்தை தரிசிப்பது நலம் பயக்கும்.

இக்கட்டுரை எழுத உதவியாயிருந்த திருத்தல அதிபர் அருட்பணி. ஜெரால்டு ரவி அவர்களுக்கும், முத்தாலங்குறிச்சி காமராசு அவர்களால் எழுதப்பட்ட தெற்கு கள்ளிக்குளம் பனிமய மாதா திருத்தல வரலாறு புத்தகத்தை வழங்கிய ஊர்த் தலைவர் டாக்டர் செபஸ்டின் ஆனந்த் அவர்களுக்கும், அரிய புகைப்படங்களை வழங்கி, திருத்தலச் சந்திப்பின் போது கள்ளிக்குளம் முழுவதும் திருப்பயணம் மேற்கொள்ள உதவிய திரு. பன்னீர்வினோ அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**திருப்பயணம் தொடரும்..................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## மாற்கு



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 1 |
| | 5 | | | | | | | 6 | |
| | | 11 | | | | | | | |
| | | | | | 13 | | | | |
| | | | | | 15 | | | | |
| | | | 14 | | | | | | |
| | | | | | | 12 | | | |
| | | 10 | | | | | 9 | | |
| | 8 | | | | | | | 7 | |
| 3 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

1) இயேசு அவர்களைப் பார்த்து “என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ………. என்றார்.

4) ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே …………. அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

6) இயேசு அங்கிருந்து புறப்பட்டு யூதேயப் பகுதிகளுக்கும் யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும்…………… அவரிடம் வந்து கூடினர். அவரும் வழக்கம் போல மீண்டும் அவர்களுக்குக் கற்பித்தார்.

7) நீங்கள் கவனமாயிருங்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள் தொழுகைக்கூடங்களில் உங்களை நையப்புடைப்பார்கள் என் பொருட்டு ஆளுநர் முன்னும் ………….. முன்னும் நிறுத்தப்பட்டு அவர்கள் முன் எனக்குச் சான்று பகர்வீர்கள்.

9) அவர்கள் கல்லறையைவிட்டு வெளியே வந்து ஓட்டம் பிடித்தார்கள் நடுக்கமுற்று மெய் மறந்தவர்களாய் யாரிடமும் எதுவும் கூறவில்லை. ஏனெனில் அவர்கள் …………. கொண்டிருந்தார்கள்.

12) அவ்வாறே அவர்கள் …………… பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள்.

13) சந்தையிலிருந்து வாங்கியவற்றைக் கழுவிய பின்னரேமூ …………… அவ்வாறே கிண்ணங்கள் பரணிகள் செம்புகள் ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன.

15) பரிசேயர் அவரை ……………. “கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?” என்று கேட்டு அவரைச் சோதித்தனர்.

**இடமிருந்து வலம்**

2) அந்திரேயா பிலிப்பு பர்த்தலமேயு மத்தேயு தோமா………….. மகன் யாக்கோபு ததேயு தீவிரவாதியாய் இருந்த சீமோன்





நம்பிக்கை வைத்தாக வேண்டும் என்ற உண்மையையே இன்றைய இறைவார்த்தை வழிபாடு வலியுறுத்துகிறது. நாமும் சாவுக்குப் பின் நிலைவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையோடு நமது இவ்வுலக முடிவை தைரியத்தோடு எதிர்கொள்ள இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

யூத முறைப்படி அதிக நாள் வாழ்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும், இளமையில் மரிப்பவர்கள் பாவிகள் என்றும் கருதப்பட்டனர். மேலும் இறந்தவர்கள் ஆன்மா பாதாளத்தில் முடிந்துவிடும் எனவும், நல்லோர் தீயோர் என எல்லாரும் அதில் அடங்கும் என்றும் நம்பிக்கை இருந்து வந்தது. ஆனால் நாடுகடத்தப்பட்டபின் மறுவாழ்வு பற்றிய சிந்தனை யூதர்களிடையே தெளிவடைந்தது. இருந்தாலும் நலமாக வாழ்வோம் என்ற நம்பிக்கை அவர்களிடையே வேரூன்றியது. எனவே பல மனிதர்கள் அரசனின் சட்டத்தை எதிர்த்து மரணத்திற்கு உட்பட்டனர். மறுவாழ்வு பற்றிய தங்களின் விசுவாசத்திற்குச் சான்று பகர உயிர்விட்ட ஒரு யூதக் குடும்பத்தின் சான்றை இவ்வாசகம் விளக்குகிறது.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இந்தத் திருமுகம் பவுலின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவதாகவும், அவரின் கருத்துக்களை மக்களிடம் கூறும்படியாகவும் அமைந்திருக்கிறது. தாங்கள் செய்யும் அல்லது சொல்லும் அனைத்திலும் இறைவன் ஊக்கமளிப்பாராக என்று வாழ்த்துகிறார். ஆண்டவருடைய வார்த்தை எங்கும் பரவி புகழ் பெற வேண்டும் என்றார். தாங்கள் கட்டளையிட்டதைச் செய்யுங்கள் என்றும் அறிவுறுத்துகிறார். இறைவனுக்கு உகந்தவாறு வாழ வேண்டுமாயின் நற்செய்தி பரவ செபிப்பதும், நற்செய்தியின்படி நமது சொல்லும் செயலும் அமைவதும் அவசியம் என்கிறது இவ்வாசகப் பகுதி.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் மீதும், நிலைவாழ்வு மீதும் நம்பிக்கை கொண்டு உயிர்ப்பின் மக்களாக வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் இறப்புக்கு பின்பு நிலைவாழ்வு உண்டு என்ற விசுவாசத்தோடு வாழவும் சாவைக்கண்டு அஞ்சாமல் துணிவுடன் எங்களது இறப்பை எதிர்கொள்ள தேவையான வலிமையையும் ஆற்றலையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, சாவின் விளிம்பில் இருக்கின்ற உம்மக்கள் மீது பரிவும் இரக்கமும் கொண்டு அவர்களுக்கு நல்ல மரணத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, எம் குடும்பத்தில் மரித்த எமது உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரின் பாவங்களை மன்னித்து அவர்களுக்கு நித்திய வாழ்வை வானக வீட்டில் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

கலக்கமுற்று வாழ்ந்து கொண்டு இருந்தனர். எனவே, அவர்கள் வேலை செய்வதைத் தவிர்த்துவிட்டு சோம்பித் திரிந்தனர். இச் சூழ்நிலையில், இத்தகைய வதந்திகளை நம்பாமல், தங்களுடைய வேலைகளிலும் குடும்ப வாழ்விலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும், தங்களுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதன் வழியாக இரண்டாம் வருகைக்காக நம்மைத் தயாரிக்க வேண்டும் என்ற பவுலின் அழைப்புக்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் எங்களிடையே இருக்கின்ற அனைத்து வேறுபாடுகளையும் விடுத்து ஒருமித்த மனதுடனும் ஒருமித்த எண்ணத்தோடும் வாழ வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா , எங்களது கிறிஸ்தவ வாழ்வில் நாங்கள் பிறரை குறித்து தவறான எண்ணத்தோடும் பிறரை குறை சொல்லி வாழ்வதையும் விடுத்து எல்லாரையும் அன்பு செய்து வாழும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா , நாங்கள் ஒவ்வொருவரும் இறைவார்த்தையிலும், நற்கருணையிலும் உம்மை சந்தித்து சக்கேயுவைப் போல புதிய மனிதனாக மாற்றம் பெற்று வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உமது இரண்டாம் வருகையை குறித்து கலக்கம் அடையாமல், மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் எதிர்பார்த்து இருக்கவும் எங்களது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றவும் தேவையான இறையருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு (06.11.2022)

**2 மக் 7:1-2, 9-14 2 தெச 2:16-3;15 லூக் 20:27-38**

**முன்னுரை**

இந்த உலக வாழ்விற்குப் பிறகு மற்றொரு வாழ்வு உண்டென்பதை மனிதன் அறிந்திருந்தாலும் இவ்வுலகை விட்டு பிரிந்து செல்கிறோமே என்ற கவலையில் மூழ்குகிறான். மற்றொரு வாழ்வின் நுழைவாயிலாக இருக்கும் சாவைக் கண்டு மனிதன் கவலைப்படவும், பயப்படவும் செய்கின்றான். அதற்குக் காரணம், இவ்வுலகில் தன்னை அன்பு செய்தவர்களையும், தான் அன்பு செய்தவர்களையும் பிரிகிறோம் என்ற எண்ணமும், வரப்போகும் வாழ்வு எத்தகையதாக இருக்குமோ என்ற பயமுமே இதற்குக் காரணம். ஆனால் உயிர்ப்பைப் பற்றி இறைமகன் இயேசுவின் வார்த்தைகளும், உயிர்த்த அவரது வாழ்க்கையும் இத்தகைய தேவையற்ற பயங்களையும் கவலைகளையும் களைவதாக உள்ளன. இதற்குப்பின் கிடைக்கும் வாழ்வில், நாம் அனைவரும் வாழ்வோரின் கடவுளின் அரவணைப்பில் வானதூதர்களைப் போல் இருப்போம் என்று இன்றைய நற்செய்தியில் கூறுகிறார்.

இயேசுவில் நம்பிக்கை வைப்பதிலும், இறப்பிற்குப்பின் வரும் வாழ்வில் நம்பிக்கை வைப்பதும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. அதாவது இயேசுவில் நம்பிக்கை வைப்பவர்கள், நிச்சயமாக உயிர்ப்பிலும்





3) அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்ல செயல் எதையும் ………… செய்ய இயலவில்லை.
5) அப்போது அவர் அவர்களைப் பார்த்து “உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?” என்று கேட்டார். …………. “ஏழு” என்றார்கள்.
8) இயேசு பெத்தானியாவில் தொழு நோயாளர் சீமோன் இல்லத்தில் ………… அங்கே பந்தியில் அமர்ந்திருந்தபோது இலாமிச்சை நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் பெண் ஒருவர் வந்தார்.
10) ஆனால் மணமகன் அவர்களைவிட்டுப் பிரியவேண்டிய ……….. வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்.
11) அவர் ………… வாயிலாகப் பலவற்றை அவர்களுக்குக் கற்பித்தார். அவர் அவர்களுக்குக் கற்பித்தது
14) அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர் அவரைப் பார்த்து “போதகரே. தீய ஆவி பிடித்துப் பேச்சிழந்த என் மகனை உம்மிடம் கொண்டு …………..

**மேலிருந்து கீழ்**

1) எவரும் பழைய ………… புதிய துணியை ஒட்டுப்போடுவதில்லை. அவ்வாறு ஒட்டுப்போட்டால் அந்த புதிய துணி பழையதிலிருந்து கிழியும் கிழிசலும் பெரிதாகும்.
2) அவர் தனிமையான இடத்தில் இருந்தபோது அவரைச் சூழ்ந்து இருந்தவர்கள் பன்னிருவரோடு சேர்ந்து கொண்டு உவமைகளைப்பற்றி ………… கேட்டார்கள்.
5) தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த …………..கொண்டிருந்தார்கள்.
6) ……….. பெத்தானியாவை விட்டு அவர்கள் திரும்பிய பொழுது இயேசுவுக்குப் பசி உண்டாயிற்று.

**கீழிருந்து மேல்**

3) இயேசு படகேறி கடலைக் கடந்து மீண்டும் மறு கரையை ……………பெருந்திரளான மக்கள் அவரிடம் வந்து கூடினர். அவர் கடற்கரையில் இருந்தார்.
4) …………… உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலையில் இருக்கிறது.
7) ஆனால் ………… அவரைப் பிடித்து நையப்புடைத்து வெறுங்கையராய் அனுப்பினார்கள்.
8) அவருக்கு எதிரே நின்றுகொண்டிருந்த நூற்றுவர் தலைவர் அவர் ………… உயிர் துறந்ததைக் கண்டு “இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்” என்றார்.
9) அப்பொழுது “என் …………..மகன் நீயே உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.
10) பின்பு அவர்களிடம் “ஓய்வுநாளில் நன்மை செய்வதா தீமை செய்வதா? உயிரைக் ……….அழிப்பதா? எது முறை?” என்று அவர் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள்.
12) அங்கே மலைப்பகுதியில்………….. பெருங் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-10-2022**

**சென்ற மாதத்தின் விடைகள் மத்தேயு**

**வ. இ.** **1.** 1:7 **3.** 5:7; **5.** 9:6; **6.** 11:4; **9.** 15:21; **13.** 24:27**; 14.** 25:7
**இ. வ.** **2.** 4:3; **4.** 7:15; **7.** 12:29; **8.** 18:12; **10.**17:16; **11.**21:2; **12.** 22:33
**மே. கீ.** **1.** 2:15; **2.**3:15; **7.** 13:33; **10.** 20:8;
**கீ. மே.** **3.** 6:16; **4.** 8:29; **5.**10:19; **8.**14:11; **9.**16:8; .

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு 5



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

தூதனவா் சொன்ன சொற்கள் படியே
துன்ப கலன்கள் சொற்பமாய் இல்லை
சிறுவா் அவா்கள் என்ற போதிலும்
சிறுமை எண்ணம் நினைத்த பாங்கில்லை
நோ்ந்த நிகழ்வு பலதான் ஆயினும்
நொந்த நிகழ்வு ஒன்றைநான் பகா்வேன்
முதல் உலகப்போா் உச்சக்கட்டம்
முடிவு என்னவென்று கருதும் மட்டம்
செர்மானிய படைகள் ஓங்கிய போதும்
போா்ச்சுகலும் இணைந்து எதிா்க்கும் நேரம்
வீட்டின் மூத்த ஆடவா் யாவரும்
நாட்டின் இராணுவம் சேரனும் கட்டாயம்
லூசியாவின் மூத்த அண்ணன் இம்மானுவேல்
யோசித்திடும் நினைவில் இல்லை அவ்வேளையில்
தாயாா் மரியரோசா உடன்படாமல் பதறுகிறாா்
தங்கை லூசியாவும் உடன்சோ்ந்து கதறுகிறாள்.
காணிக்கை தந்ததைப் போலவே அனுப்பினா்
கையறு நிலைமையதன் கண்ணீரில் குளித்தனா்
மாதங்கள் சிலதான் கடந்து இருக்கும்
சோகங்கள் பலவும் தொடா்ந்தே இருக்கும்
போரினில் இம்மானுவேல் மடிந்தனன் என்று
காதினில் ஈயம்போல் சேதிதான் அன்று
தாயவள் முற்றுமாய் நொறுங்கி போனாா்
தங்கையும் மொத்தமாய் ஒடுங்கி போனாள்.
களத்துக்கு போவது சிறுவா்கள் வழக்கமாயினும்
கலகலப்பு போனது மூவரின் முகத்தினில்
உறக்கம் தொலைத்து கலக்கம் அடைந்தாலும்
சுணக்கம் இல்லாமல் செபத்தை தொடா்ந்தனா்
தூதா் சொன்னதெல்லாம் நினைத்துப் பாா்த்தனா்
துன்ப கலனெல்லாம் சகிக்க துணிந்தனா்
அன்னை மரியவா் காட்சியை எண்ணியே
கண்ணை காவலாய் அமா்த்தி பாா்த்தனா்





3. அன்பின் இறைவா, இறைவாா்த்தையின் நிமிா்த்தமாகவும், கிறிஸ்துவின் மதிப்பீடுகளின் நிமிா்த்தமாகவும் நாங்கள் சந்திக்கின்ற எல்லா பிரச்சனைகளையும் துணிவோடு எதிா்கொள்ள போதுமான இறையருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, எமது நாட்டு , சமூக , சமய தலைவா்கள் நான் என்ற அகந்தையை விட்டுவிட்டு தொண்டு பெற அன்று, தொண்டு புரியவே என்பதை உணா்ந்து மக்களுக்காக தங்களையே அா்ப்பணித்து வாழ முன்வர தேவையான இறையருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 31 ஆம் ஞாயிறு (30.10.2022)**
**சா ஞா 11:22-12:2 தெச 1:11-22 லூக் 19:1-10**

**முன்னுரை**

இன்றைய உலகில் உலகைப் பிடித்துள்ள மாபெரும் சாபக்கேடு ஒருவன் தன் சொந்த வீட்டிலேயே அன்னியனாக வாழும் அவலநிலை. அன்னை தெரசா அடிக்கடி கூறியது “இவ்வுலகில் பெரிய சாபம், எவராலும் விரும்பப்படாமல் புறக்கணிக்கப்படும் நிலை.” எனவேதான் அவா் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவா்களுக்கு ஆதரவு மட்டுமல்ல அன்பையும் வழங்கினாா். சாக்கடையில் தள்ளப்பட்டோரின் புனிதா் (saint of the Gutters) என்று அவா் அழைக்கப்பட்டாா்.

இன்றைய நற்செய்தியில் நாம் சந்திக்கும் சக்கேயு, தான் வாழ்ந்த சமுதாயத்தில் அன்னியமாக்கப்பட்டிருந்தாா். அவருக்குப் பணமும் மற்ற எல்லா வசதிகளும் இருந்தன. இருப்பினும் அவா் சமுதாயத்தில் தனிமைப்படுத்தப்பட்டாா். அவா் எல்லா நாளும் புறக்கணிக்கப்பட்டு “பாவி” என்று முத்திரை குத்தப்பட்டாா். ஏனெனில் அவா் உரோமைப் பேரரசின் கைக்கூலியாக செயல்பட்டாா். அவா் வரி தண்டுபவா், மக்களைக் கசக்கிப் பிழிந்த சமுதாய விரோதி என்று கருதப்பட்டாா். இருப்பினும் இயேசு அவரையும் அன்பு செய்தாா். கடவுள் அவருக்கும் அந்நியா் அல்ல, நெருக்கமானவா். ஏனெனில் கடவுள் பாவத்தை வெறுத்தாலும் பாவிகளை அன்பு செய்கிறாா். சக்கேயு கிறிஸ்துவை சந்தித்தபின் அவா் புது மனிதராக மாறிவிட்டாா். கிறிஸ்துவின் பிரசன்னம் அவரை முற்றிலுமாக மாற்றிவிட்டது. கிறிஸ்துவை நாமும் உண்மையிலேயே சந்தித்தோம் என்றால், அவரது பிரசன்னமும் அவருடைய அருள்வாக்கும் நம்மை முற்றிலும் மாற்றிவிடும். ஆகவே இத்திருப்பலியில் கிறிஸ்துவை சந்திப்போம் புது மனிதராக நமது விசுவாச வாழ்வை தொடா்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம், கடவுள் தாம் படைத்த அனைத்தையும் அன்பு செய்கிறாா். அவற்றில் எதையும் அவா் வெறுப்பதில்லை. கடவுள் ஒருவரை வெறுத்தால் அவரைப் படைத்திருக்கவே மாட்டாா் என்கிறது. கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தது எவரையும் அழிக்காமல் எல்லாரையும் மீட்கவே. ஆகவே கிறிஸ்துவின் மீட்பு பாவிகளாகிய நமக்கும் உண்டு என்று நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவி மடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

தூய பவுல் தெசலோனிக்கயருக்கு எழுதிய 2 வது கடித காலத்தில் மக்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக விரைவில் நிகழும் என்று நம்பி

உணராமல் ஒருவர் ஒருவரை ஒப்பிட்டுப் பேசும்போது அது தேவையற்ற வீண் விளைவுகளுக்கு இட்டுச் செல்கிறது என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஒரு மனிதன் தன்னைவிட தாழ்நிலையில் இருப்பவர்களோடு தன்னை ஒப்பிடும்போது கலக்கம் அடையத் தொடங்குகிறான். அதே போல் தன்னைவிட மேலானவரோடு ஒப்பிடும்போது தாழ்வு மனப்பான்மையையும், தமது வாழ்வைப் பற்றிய திருப்தியின்மையையும் கொள்கிறான். இதன் காரணமாக பொறாமைக்கும், காழ்ப்புணர்ச்சிக்கும் உள்ளாக்கப்படுகின்றான்.

நமது அனுதின வாழ்வில் மகிழ்வோடும், ஒற்றுமையோடும் வாழ வேண்டுமெனில், நாம் நம்மையே கடவுளுக்கு முன்பாகவும் நமது சகோதரர் சகோதரிகளுக்கு முன்பாகவும் எளிமையான தாழ்ச்சி நிறைந்த மனதோடு வாழ வேண்டும். ஏனெனில் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைக் கடவுள் சிதறடிக்கிறார் என்கிறது இறைவார்த்தை. எனவே நான் என்னும் ஆணவச் செருக்கை வெளியேற்றிவிட்டு நமது உள்ளங்களை கடவுளிடம் கொடுப்போம். அதன் வழியாக இறைவனது அருளையும் அவரது இரக்கத்தையும் நிறைவாகப் பெறுவோம். நம்மையே நாம் வெறுமையாக்கி இறையருளை தமதாக்கிக் கொள்ள தேவையான தாழ்ச்சி என்கின்ற உன்னத கொடையை வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இறுமாப்பு கொண்டோரின் கூட்டத்தை அழித்து அநீதிகளின் செங்கோலை முறிக்கும் வரை இறைவன் பொறுமை காட்டுவதில்லை என்கிறது சீராக் ஆகமம். மேலும் காலத்துடன் நாம் ஜெபிக்கின்றபோது நம்முடைய ஜெபம் இறைவனைச் சென்றடையாது எனவும், தாழ்த்துவோரின் வேண்டுதல் மேகங்களை ஊடுருவிச் செல்லும் என்கிறது. நாமும் தாழ்ச்சி வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

தூய பவுல் வாழ்வில் இறுதிகட்டத்தில் சீனாயில் அடைக்கப்பட்டபோது தான் பட்ட வேதனைகளை குறித்து மகிழ்ச்சி கொள்கிறார். தனது துன்பங்களின் வழியாக இறைவன் தனக்கு தர இருக்கின்ற வெற்றி வாகையை குறித்து மகிழ்கின்றார். நாமும் புனித பவுலை போல இறைவன் நிமித்தமாக எல்லாவற்றையும் குப்பை என்று கருதினால், கடவுள் நம்மை நமது இறுதிநாளில் உயர்த்துவார் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் தாழ்ச்சி என்கின்ற புண்ணியத்தை தமதாக்கி கொண்டு வாழ தேவையான அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, உயர்ந்தவன் தாழ்ந்தவன், பணக்காரன் ஏழை, படித்தவன் பாமரன் என்கின்ற வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ தேவையான அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலத்தின் 28ம் ஞாயிறு (09.10.2022)**

**2அரசர் 5:14-17 2திமோ2:8-13 லூக் 17:11-19**

**முன்னுரை**

Noman is an Island மனிதன் என்பவன் தனித்து இயங்கக் கூடியவன் அல்லன். தன் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் பிறரை சார்ந்திருக்கின்றான். பிறரின் உதவி அவசியம் என்று உணர்ந்திருக்கின்றான். இவ்வாறு உதவி வரும்போது அவ்வுதவிக்கு நன்றி உள்ளவனாக இருக்க வேண்டும் என்று இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நன்றி என்ற புண்ணியத்தால் வளரும் மனிதன் மற்ற மேன்மையான புண்ணியங்களையும் எளிதாகப் பெற்றுக் கொள்கின்றான். இதையே நன்றி என்பது முதன்மையான புண்ணியம் மட்டுமல்ல எல்லா புண்ணியங்களுக்கும் மூலகாரணமாக விளங்கும் புண்ணியமாகும் என்கிறார். மிகவும் புகழ் பெற்ற பேச்சாளர் சிசரோ. கடவுளுக்கு இரண்டு உறைவிடங்கள் உள்ளன. ஒன்று விண்ணகம் மற்றொன்று நன்றி நிறைந்த இதயம் என்கிறார் வால்ட்சன் . இறைவன் நேரடியாகவும் பல நபர்கள் வழியாகவும் அருள் செல்வங்களையும் பொருள் செல்வங்களையும் வாரி வழங்குகின்றார். அவற்றை நினைவு கூர்ந்து இறைவனுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி கூறுவது நமது கடமை என்கிறது இன்றைய இறைவார்த்தை வழிபாடு.

ஆன்மீக வாழ்விலும் அகவாழ்விலும் முதிர்ச்சி பெற்ற மனிதர்கள் மட்டுமே வாழ்வில் எல்லா சூழ்நிலையிலும் இறைவனுக்கு நன்றி செலுத்த முடியும். எனவே நமது ஆன்மீக மற்றும் அகவாழ்வில் முதிர்ச்சி அடைய தேவையான இறைஅருளையும் இறைஅனுபவமும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் எலிசா என்ற இறைவாக்கினர் சீனாய் நாட்டுத் தொழுநோயாளி நாமான் என்பவரை குணப்படுத்துகிறார். நாமான் எலிசாவுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் அன்பளிப்பு வழங்குகின்றார். ஆனால் எலிசா அதற்கு அன்பளிப்பை வாங்க மறுத்தபோது இஸ்ரயேலின் கடவுள் ஒருவரே உண்மையான கடவுள் என்று பிற இனத்தவரான நாமான் அறிக்கையிடுகிறார்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இறைப்பணி புரிய மனஉறுதி வேண்டும் என்று தூய பவுல் திமோத்தேயுவுக்கு இரண்டாம் திருமுகம் வரைகிறார். ஏனெனில் உயிர்த்தெழுதலைப் பற்றிய மாறுபாடான போதனைகளும் உலக இச்சைக்குட்பட்ட போதனைகளும் துவக்க திருச்சபையிலிருந்து புனித உறுப்பினர்களுக்கு ஒரு நம்பிக்கையற்ற நிலையை ஏற்படுத்தியிருந்தது. எனவே மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வார்த்தையாக இப்பகுதி அமைகிறது. கிறிஸ்துவோடு இணைந்து பயணிக்கத் தேவையான இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவைப் போல் செல்லுகின்ற இடமெங்கும் நன்மை செய்து வாழ தேவையான இறையருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது ஆன்மீக மற்றும் அகவாழ்வில் முதிர்ச்சி பெற்று வாழ்வின் எல்லாச் சூழ்நிலையிலும் இறைவனுக்கு நன்றி கூறி வாழும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, உம்மீது நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கை நாளுக்குநாள் வளரவும் அதன் வழியாக நாங்கள் எங்கள் அனுதின வாழ்வை மகிழ்வுடன் தொடர துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, உடல், மன நோய்களால் துன்புறும் உமது மக்கள் உமது கருணையாலும் இரக்கத்தாலும் முழுமையாக சுகம் பெற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 29 ஆம் ஞாயிறு (16.10.2022)**

**விப 17:8-1 2திமோ 3:14-4;2 லூக் 18:1-8**

**முன்னுரை**

ஆன்மீக வாழ்வின் அடித்தளமாக இருப்பது ஜெபம். ஜெபம் என்பது கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே நிகழ்கின்ற ஓர் உண்மையான சுதந்திரமான உரையாடல். இவ்வுரையாடல் வலுபெறுகின்றபோது வாழ்வில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் உயர்கின்றது. இடைவிடாமல் ஜெபம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனால் நமக்கு ஏற்படுகின்ற பலனையும் குறித்து இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு எடுத்துரைக்கின்றன. உண்மையான ஜெபம் என்பது கடவுளோடு தொடர்பில் இருப்பது. நமது சிந்தனைகள், செயல்கள், உணர்வுகள், செயல்திட்டங்கள் அனைத்தையும் ஆண்டவர்முன் அலசிப்பார்ப்பது உண்மையான ஜெபம். உண்மையான ஆழமான, நீதியான ஜெபம் எப்பொழுதும் கேட்கப்படும். இதற்கு, சிறந்த உதாரணமாக இருப்பது இன்றைய முதல் வாசகம் மற்றும் நற்செய்தி

ஜெபத்தினால் எல்லாம் கைகூடும் என்று எண்ணி மனித முயற்சியைக் கைவிடக்கூடாது. கடவுளே எல்லாம் பார்த்துக் கொள்வார் என்று முயற்சி எடுக்காமல் இருப்பது கடவுள் நம்பிக்கையாகாது. அது கடவுளை சோதிப்பதாகும். கடவுளும் கைவிடுவது போலத் தோன்றினாலும், மனித முயற்சிக்குத் தக்க பலன் கிடைக்கும் என்பதை இன்றைய வாசகங்கள் உணர்த்துகின்றன. கடவுள் கொடுப்பதை மனிதர் தடுக்க முடியாது. முடிவாக கடவுள் நம்பிக்கையுடன் தன்னம்பிக்கையும் இணைந்து செல்ல வேண்டும். தங்களுக்கு தாங்களே உதவி செய்பவர்களுக்குத் தான் கடவுளும் உதவி செய்கிறார் என்ற புரிதலோடு நமது கிறிஸ்தவ விசுவாச வாழ்வைத் தொடர அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

மோசே கடவுளின் கோலை கையில் பிடித்தவாறு தம் கையை உயர்த்தி ஜெபிக்கும் போதெல்லாம் இஸ்ரயேல் மக்களுக்கு வெற்றி கிடைத்தது. மோசே கையிலிருந்து கடவுளின் கோல்தான் ஜெபம் என்னும் நெம்புகோல். அதை மோசே உயர்த்தியபோது கிடைத்தது வெற்றி. அக்கோலைத் தளர விட்டபோது கிடைத்தது தோல்வி. எனவே நாமும் நம் கைகளை உயர்த்தி செபித்து இறையருளை நிறைவாக பெற நமக்கு அழைப்புவிடுக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

தூய ஆவி மட்டுமே நமது ஆசான். ஆவியானவர் நம் கைகளில் ஒரு செப வழிகாட்டியை வைத்துள்ளார். அதுவே விவிலியம். எல்லாத் துன்பச் சூழ்நிலைகளிலும் விசுவாசத்துடன் வாழ இறைவார்த்தையை எடுத்து செபிக்க வேண்டும். இறைவார்த்தை வழியாகவே இறைத்திருவுளத்தை உணரமுடியும். இறைவார்த்தையை அனுதினமும் வாசித்து செபித்திட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை , ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர், பொதுநிலையினர், இறைவார்த்தையை நாள்தோறும் வாசித்து இறைவனது திருவுளத்தை அறிந்து அத்திருவுளத்திற்கு ஏற்ப தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் அனைவரும் ஜெபத்தின் வல்லமையை உணர்ந்து தனி ஜெபத்திற்கும், குடும்ப ஜெபத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து உமது அருளைப் பெற எங்களுக்கு துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3அன்பின் இறைவா எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் நாங்கள் ஜெபிப்பதை எங்கள் வாழ்வாக்கவும் அதன் வழியாக இறைத்திட்டத்தை செயல்படுத்த வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, எல்லா சூழ்நிலையிலும் நாங்கள் நம்பிக்கையோடு வாழவும், உமது பிரசன்னத்தை மட்டுமே எங்களது வாழ்வின் மையமாகக் கொண்டு வாழவும் எங்களுக்கு துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 30 ஆம் ஞாயிறு (23.10.2022)**

**சீஞா 35 :12-14,16-18 2திமோ 4:5-8,16-18 லூக் 18:9-14**

**முன்னுரை**

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சிறப்பு படைப்பு. அவன் தனித்தன்மை வாய்ந்தவன். நிறை குறைகள் கொண்டவன். இதை